


# ரமணோதயம்

ஏப்ரல் 2020

காலாண்டு

ஆராதனை இதழ்

விலை ₹ 20



## ரமணோதய அன்பர்களுக்கு ஓர் வேண்டுகோள்

ரமணோதய சந்தா புதுப்பிக்காதவர்கள் தயவுசெய்து தங்களது சந்தாவைப் புதுப்பிக்கவோ அல்லது ஆயுள் சந்தாவாகச் செலுத்தவோ செய்து உதவுமாறு கேட்டுக் கொள்கிறோம்

உதயம் 19 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 3

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

ஆராதனை இதழ்

ஏப்ரல் 2020

ஆசிரியர்: Dr. S. ராம் மோஹன்

- கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
- கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.
- மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

ஆண்டு சந்தா: ₹ 75 தனி பிரதி: ₹ 20

ஆயுள் சந்தா: ₹ 1500

காசோலை/மணியார்டர் 'ரமணோதயம்' என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:

ஆ. குமார் ராஜா: 9444261296

மின்னஞ்சல்: arunamramanam@gmail.com

மேலாளர் கண்ணன்: 9940418375

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:

ஆ. குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்

41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை 4

தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

ஆராதனை இதழ், ஏப்ரல் 2020


| வ.எண் | பொருள் | | ப.எண் |
|---|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | | 3 |
| 2 | ஔவைக் குறள் | ராம் மோஹன் | 16 |
| 3 | தமயன் அளித்த ஆன்மக் கொடை | | 21 |
| 4 | பேரமைதி நிலவிய பெருநாட்கள் | | 26 |
| 5 | அக்ஷர மணமாலை - ஒரு தத்துவக் கருவூலம் - பகுதி 17 | டாக்டர் ஏ.வி. ராஜகோபாலன் | 31 |
| 6 | சப்ரிஜிஸ்திரரார் நாராயண ஐயர் | வி. நிரஞ்சன் | 42 |
| 7 | பொது சுகாதார நெருக்கடியின்போது பகவான் | | 46 |
| 8 | ரமணாயனம் | க்ரேஸி மோஹன் | 53 |
| 9 | இனிவரும் திருநாட்கள் | | 57 |
| 10 | பெருங்கருணைப் பேராறு | Dr.K. சுப்ரஹ்மணியன் | 58 |
| 11 | உத்தவ கீதை: சில கேள்விகளும் பதில்களும் | | 68 |
| 12 | செய்திகள் | | 75 |

# ஆசிரியர் உரை

## இடையறா ஆனந்தம் – இங்கே; இப்பொழுதே!

ஆன்மிக உண்மைகள் என்றும் இருப்பவை. இறைவன் தனது லீலையின் மூலம் உலகைப் படைத்தபோதே இவற்றையும் படைத்து விட்டான். நாம் செய்ய வேண்டியது எல்லாம் இவற்றை உணரத் தலைப்படுவதே. வானத்தில் *cyberspace*இல் தவழும் கருத்துக்களையும் காட்சிகளையும் டெலிவிஷனை/கம்ப்யூட்டரை ஆன் செய்தவுடன் நம் கண்ணெதிரில் தெரிவதுபோல் இவற்றை நம் இதயத்தில் கொண்டு வரமுடியும். நம் அறியாமையாம் திரையால் போர்த்தப்பட்டு இருப்பதால் இதனை நம்மால் கண்டு அறிய முடியவில்லை. இறைவன் துவக்கத்தில் படைத்த பாரமார்த்திக அறிவு அலைகளை, அஞ்ஞானம் தாண்டிய தீர்க்கதரிசனம் படைத்த மஹரிஷிகள் தம் ஆன்மிக ஞானமாகவே *starter*ஐ அழுத்துவதன் மூலம் நம் நெஞ்சத் திரையில் கொணர்கின்றனர். எனவே ரிஷிகள் 'மந்த்ர த்$^{3}$ருஷ்டாராஹ' ('மந்திரம் கண்டோர்') என்று மதிப்புடன் அழைக்கப்படுகின்றனர்.

இங்ஙனம் தம் ஞானக்கண்ணால் ரிஷிகள் கண்டறிந்த தத்துவங்களை மனித குலம் தம் அறியாமையாலும், சிரத்தை இன்மையாலும் காலம் செல்லச்செல்ல சிறிது சிறிதாக மறக்கத் துலங்குகிறது. எனவே இத்தத்துவங்களைப் புதுப்பொலிவுடன் கற்பிக்க இறைவன் வெவ்வேறு காலங்களில் ஸத்குரு வடிவம்

தாங்கி வருகிறான். தமது அவதார ரஹஸ்யம் பற்றிக் கூறுமிடத்து பகவான்,

*தலத்தில் புன்புலன் சழக்கில் துன்புறும்*
*தவிக்குத் துஞ்சிடும் படிக்குத் தன்உளம்*
*தழைக்கத் தன்பதம் எனக்குத் தந்தனன்*
*சிவக்கச் சின்மயம் செழிக்கத் தன்மயம்*
*செகத்தில் துன்னுசெம் பொருப்புச் செம்மலே*

*(நவமணிமாலை, 8)*

“புலன்களின் பிடியில் வதைபட்டு துன்புறுகின்ற இவ்வுலக ஜீவன்கள், அதன் பிடியில் இருந்து நீங்கி சின்மய ஞானம் தழைக்கும்படி என்னை அவதாரம் செய்ய வைத்தான்” என்று பகவான் தன் அவதார நோக்கத்தை வெளியிடுகிறார்.

பகவானைப் போலவே கிட்டத்தட்ட ஆயிரத்து ஐநூறு ஆண்டுகட்குமுன் அருணாசலனின் அவதாரமாய் வந்த திருஞானசம்பந்தரும் “இதுவே எனது அவதார நோக்கம்” என்பதைத் தெளிவுறக் கூறுகிறார்.

*. . . . திருந்தடி*
*மறக்குமா றிலாதஎன்னை மையல்செய்துஇம் மண்ணின்மேல்*
*பிறக்குமாறு காட்டினாய் பிணிப்படும் உடம்புவிட்டு*
*இறக்குமாறு காட்டினாய் இழுக்குகின்றது என்னையே!*

*(02.098)*

“உன் திருவடியை விட்டு நீங்க விரும்பாத என்னை மயங்கச் செய்து, ஞானத்தைப் பரப்புவதற்காக இப்பூமியின் மீது பிறக்கச் செய்தனை! பிறந்தபின்னர் எனக்கு மரணானுபவத்தைத் தந்து மீட்டும் ஞானப்பிறவி எடுக்கச் செய்தனை” என்கிறார். பகவானின் மரணானுபவத்தையே போன்று 1400 ஆண்டுகட்கு முன்பே அறுதி இட்டுக் கூறுகிறார் சம்பந்தர்.

பகவான், சம்பந்தர் போன்ற மஹாத்மாக்கள் இந்த நோக்கத்துடனே தோன்றி, தகுந்த சீடர்கட்கு சத்யத்தைப் போதித்து அருள்கின்றனர். சங்கரபகவத்பாதரும் தனது

'ப்ரௌடானுபூதி' நூலில் 'ஸத்யம் ஸமஸ்ருதவான் .... சச்சிஷ்ய போதாய தத்' என்று இந்நோக்கத்தை எடுத்துக் கூறுகிறார்.

காலத்தின் போக்கில் சமூகத்தின் பார்க்கும் கோணங்கள் மாறுபடுகின்றன. இதனைக் கருத்துட்கொண்டு, புராதனக் கருத்துகட்கு புதுவடிவம் கொடுத்து, சமுதாயத்திற்கு ஞானத்தை வழங்கி உயிரூட்டுகின்றனர் பகவான் போன்ற ஞானிகள். எனினும், ரமண பகவானின் அருள்மொழிகள் என்று அழியாத பாரதத்தின் அடிப்படைத் தத்துவங்களே. இவற்றை பகவான் இக்காலத்தின் தேவைக்கேற்ப தேவையான இடங்களில் அழுத்தம் ஈந்து புதுப் பொலிவுடன் வழங்கி உள்ளார்.

வேதாந்தத்தின் அடிப்படைக் கொள்கை "உள்ள வஸ்து ஒன்றேதான். அதுவே ஆன்மா. மற்றை யாவையும் புறத் தோற்றங்களே" என்பதாம்.

"ஏகம் ஸத் விப்ரா பஹுமதா வதந்தி" என்று வேதம் இதனை மொழிகின்றது. எங்கும் பரவி இருப்பது இவ்வான்மாவே.

*திவ்ய யோஹ்ய மூர்த்த:*
*புருஷஸ பாஹ்யாப் யந்தரே ஹ்யஜ:*

என்று முண்டக உபநிஷதம் கூறுகின்றது.

பொருள்: "பரமாத்மா சுயஞ்சுடரானது; வடிவம் அற்றது; பிறவாதது; தூயது; அனைத்தினும் வியாபித்து இருப்பது; புறத்தினும் அகத்தினும் இருப்பது" என்கிறது உபநிஷதம்.

இதனையே

*கரந்த சில் இடந்தொறும்*
*இடம் திகர் பொருள் தொறும்*
*கரந்து எங்கும் பரந்துளன்*

என்கிறார் எழிலுற நம்மாழ்வார்.

இதுவே நம் சமயத்தின் அடிப்படைக் கொள்கை. இதனை மீண்டும் உயிரூட்டி விளக்க வந்த பகவான், அழகிய தமிழ்ப் பாவால் மனதில் பதியும்படி விளக்குகிறார். தேவிகாலோத்தர ஞானாசார விசாரப் படலத்தில் இந்த உபநிஷதப் பேருண்மையை அனைவருக்கும் விளக்குவதற்காக அழகான தமிழில் எழுதுகிறார்.

*இருக்கின்றேன் என் கலையோடு ஏய்ந்த சைதன்ய*
*உருசக்தி அஃதால் ஒளிரும் - பிரபஞ்சம்*
*ஸர்வம் சக்தி தியானம் சார் நிஷ்கள ஞானம்*
*சர்வ நிராலம்பம்தான்*

*(தேவிகாலோத்தரம், 13)*

இதன் பொருளாவது: "இருக்கின்றேன் என்ற உணர்வு மாத்ரமான ஒரே அம்சத்துடன் கூடிய சைதன்ய ஸ்வரூபம் எது ஒன்று உளதோ, அதுவே சக்தி எனப்படும். அந்த சக்தியின் அம்சத்தினால்தான் இந்த உலகம் பிரகாசிக்கின்றது. அந்த சக்தியின் அம்சமான மனம் சகல பற்றுக்களும் அற்று நிற்பதுதான் அடையத்தகுந்த நிஷ்கள ஞானமாகும். உருவமற்ற ஞானமே ஆத்மாவாகும்.

"அஸ்தி இதி உபலப்யதே"

'உள்ளது' என்ற ஞானத்தாலேயே ஆத்மா அறியப்படுகின்றது என்னும் உபநிஷத் வாக்யம் இதை விளக்குகிறது. எந்த உபாதிக் கலப்பும் அற்ற தன்னுணர்வே ஆத்மஞானம். இதுவே அதன் ஸ்வரூப லட்சணம் என்னும் பழைய தத்துவத்தை சிறப்பாக விளக்குகிறார் பகவான்.

இந்த ஆத்ம ஸ்வரூப உணர்வே மனித வாழ்வின் லட்சியம் என்பதை மீண்டும் சிவபிரான் குமரக் கடவுளுக்குக் கூறுவதுபோல் 'ஆன்ம சாட்சாத்கார பிரகரணம்' 35ஆவது பாடலில் பகவான் கூறுகிறார்.

*இது மந்திரமாம் இது தேவதையாம்*
*இதுவே தியானம் எனலும் - இதுவே*
*தவமாகும் எண்ணங்கள் எல்லாம் தணந்து*
*சுவரூப சிந்தனை துணி.*

அதாவது தனது ஸ்வரூபமாம் ஆத்ம தியானமே ஜபிக்கத் தகுந்த உயர்ந்த மந்திரம். இதுவே உபாசிக்க உகந்த மூர்த்தி.

இதுவே மிக உயர்ந்ததாம். எனவே எண்ணங்கள் யாவையும் நீக்கிவிட்டு, 'நான் யார்' என்னும் ஸ்வரூபத் தியானம் ஒன்றையே நீ திடமாகப் பற்றித் துணிவுடன் முன்னேறுவாயாக என்கிறார் பகவான். இங்ஙனம் மந்திரம், தேவதை, தியானம் ஆகிய அனைத்துமாய் இருப்பது ஸ்வரூபத் தியானமே. இதைச் செய்யத் தடையாய் உள்ள எண்ணங்கள் அனைத்தையும் ஒடுக்கி நீக்குவாய் எனப் பழைய பாதையைப் பகவான் புதிதாகச் சிவன் உபதேசத்தால் செப்பனிட்டு வழிகாட்டுகிறார்.

இங்ஙனம் என்றும் மாறாத அடிப்படைத் தத்துவத்தினைத் தனது அன்பருக்கு நேரடியாக உபதேசித்து அருளுகிறார் பகவான்.

*சுகக்கடல் பொங்கச் சொல்லுணர்வு அடங்க*
*சும்மா பொருந்திடுஅங்கு அருணாசலா*

*(அக்ஷரமணமாலை, 31)*

'சும்மா' என்ற சொல் வலிமை மிக்கது. 'ஸ்வம்' ஆக, தான் தானாகவே இருப்பதையே 'சும்மா' இரு என்கிறார் பகவான்.

'சும்மா இரு சொல்லற' என்று அருணகிரியும் 'சும்மா இருக்கும் சுகம்' எனத் தாயுமானவரும் இதையே சுட்டிக் காட்டுகின்றனர்.

*கண்டவன் எவன்எனக் கருத்தின் உள்நாடக்*
*கண்டவன் இன்றிட நின்றது கண்டேன்*

*கண்டனன் என்றிடக் கருத்து எழவில்லை*
*கண்டிலன் என்றிடக் கருத்தெழும் ஆறுஎன்!*

என அருணாசல அஷ்டகம் இரண்டாம் பாடலிலேயே இக்கருத்தை விளக்குகிறார். "இந்த அருணாசலத்தைக் கண்ட மாத்திரத்திலேயே மனம் உள்நோக்கித் தன்னை விசாரிக்கத் தொடங்கியது. இதனால் கண்டவன் யார் என்னை நானே விசாரித்து, முடிவில் அகந்தை அழிந்து என்றுமுள்ள ஆன்மாவை உள்ளபடி உணர்ந்தேன். மனோவாக்கிற்கு எட்டாத அந்நிலையை வார்த்தையால் சொல்லி விளக்க முடியாது" என்கிறார் பகவான்.

*யதோ வாசோ நிவர்த்தந்தே அப்ராப்ய மனஸா ஸ:*

என்கிற வேத வாக்கினை பகவான் தன் பாடலில் இங்ஙனம் எல்லோரும் அறியும்படி விளக்குகிறார்.

இதே கருத்தினை அருணாசல பஞ்சரத்னம் 3ஆவது பாடலில்,


*அகமுகம் ஆர்அந்த அமலமதி தன்னால்*
*அகம் இதுதான் எங்குஎழும் என்று ஆய்ந்தே - அகஉருவை*
*நன்கறிந்து முந்நீர் நதிபோலும் ஓயுமே*
*உன்கண் அருணாசலனே ஓர்*

"உள்நோக்கித் திரும்பிய அந்தக் கூர்மையான தூய மனத்தால் இந்தத் தேகத்தையே நான் என்று எண்ணும் தவறு எங்கிருந்து வருகிறது என்பதைத் தீர விசாரித்து அறிக. அப்போது கடலில் கலக்கும் நதிபோல ஆத்மா பகவானில் ஒடுங்கி விடும்" என்கிறார் பகவான்.

இந்த அடிப்படை மூலமாம் உபநிஷதக் கருத்தினை தன் நேரடி உபதேசம் மூலம் மேலும் விளக்குகிறார் பகவான்.

*எண்ணங்களே மனம் யாவினும் நான்எனும்*
*எண்ணமே மூலமாம் உந்தீபற*
*யானாம் மனம்எனல் உந்தீபற*

*(உபதேச உந்தியார், 18)*



“எண்ணக் கூட்டங்களின் தொகுதியே மனம் என்று சொல்லப்படுகிறது. முதலாவதாகத் தோன்றுவது இந்த தேகம் நான் எனும் எண்ணமாகும். இந்தத் தேகத்தை நான் என்று என்னும் எண்ணற்கே மனம் இதனை அழிப்பாய்” என்கிறார். மேலும் ஆத்ம விசாரத்தைத் தொடர்ந்து செய்ய, நான் என்ற எண்ணமே எழாமல் மடிந்துவிடும். இதுவே ஞான விசார வழி. அப்படி

அகந்தை அழியும்போது 'நான்-நான்' என்ற இருப்பு உணர்வு தானாகப் பிரகாசிக்கும் என்கிறார் பகவான்.

'உள்ளது நாற்பது' ஞானக் களஞ்சியத்தின் 30ஆவது பாடலில் பகவான்,

**நான்ஆர் எனமனம் நாடி உள் நண்ணவே**
**நான்ஆம் அவன்தலை நாணம்உற - நான்நான்ஆத்**
**தோன்றும் ஒன்றுதானாகத் தோன்றினும் நான்அன்றுபொருள்**
**பூன்றம்அது தானாம் பொருள்.**

பொருள்: 'நான் யார்' என்னும் ஆத்ம விசாரத்தால் மனம் உள்முகமாகி இதயத்தில் ஒடுங்கும். தேகமே நான் என்னும் அகங்காரம் ஒடுங்கும். அப்போது 'நான்-நான்' என்னும் ஆத்மா இடைவிடாது தானே பரிபூர்ண வஸ்துவாகிப் பிரகாசிக்கும்.

நினைவுகளை எல்லாம் நீக்கிப் பார்க்கும்போது தனியாக மனம் என்று ஒருபொருள் இல்லை. ஆகையால் நினைவே மனதின் ஸ்வரூபம். விழிப்பிலும் கனவிலும் நினைவுகள் எழுகின்றன. எப்படி சிலந்திப் பூச்சி தன்னிடம் இருந்தே நூல் எடுத்து வெளியில் வலைபின்னி, மீண்டும் தன்னுள்ளேயே இழுத்துக் கொள்கிறதோ, அப்படியே மனமும் தன்னிடம் இருந்தே உலகத்தைத் தோற்றுவித்து மறுபடியும் தன்னில் ஒடுக்கிக் கொள்கிறது. மனதின் ஸ்வரூபத்தை விசாரித்துக் கொண்டே போனால் 'தானே' மனமாய் முடியும்.

ஒவ்வொரு எண்ணமும் கிளம்பும்போதே கவனமாய் இது யாருக்கு உண்டாயிற்று என்று விசாரித்தால் 'எனக்கே' என்று தோன்றும். பிறகு அந்த 'நான் யார்' என்று விசாரித்தால் மனம் தன் பிறப்பிடத்திற்குத் திரும்பிவிடும். எழுந்த எண்ணமும் அடங்கிவிடும் என சிவப்பிரகாசம் பிள்ளைக்கு விளக்குகிறார் பகவான். இவ்விதமாக மனம் இதயத்தில் தங்கினால் எல்லா நினைவுகட்கும் மூலமான நான் என்பதுபோய்

எப்போதும் உள்ள 'தான்' மாத்திரம் விளங்கும் என்கிறார் பகவான்.

இங்ஙனம் அடிப்படைத் தத்துவமான சொரூபத்தில் நிலைபெற்று இருத்தலை பகவானின் அருட்பார்வை கொண்டே நேரடியாகப் பெற்ற முருகனார் கூறுவதைக் காண்போம்.

*அன்புப்பணி கொண்டு அடியேனை ஆண்டவன்பேர்*
*இன்ப அருட்பார்வைக்கு இலக்காகி - இன்பதுன்ப*
*தொந்தக் கலக்கம் அறத்துன்று சொரூபானுபவச்*
*சந்தவியல் பெற்றேன் சதிர்த்து.*

*(ஸ்ரீ ரமண ஞான போதம், நான்காம் பாகம், 866)*

*[தொந்தம்=இரட்டை, துன்று=நெருங்கிய]*

*ஆதம்இலி நாயேன் அகம்கிளரப் புக்குஒளிரும்*
*போத சொரூபஅருட் புண்ணியன் கண்ணோக்கத்தால்*
*போத சொருபானு பூதிஉளம் பொங்கல்உற்றேன்*
*பேத மயக்கஅகப் பீழையறப் பேர்ந்தேனே.*

*(ஸ்ரீ ரமண ஞான போதம், நான்காம் பாகம், 894)*

எப்படி ஒரு ஸ்பரிய வேதக்கல் தன்னிடம் வந்த இரும்பையும் தங்கம் ஆக்குகிறதோ, அதுபோல் 'நான் ஆன்மாவே' என்னும் என்னுடைய சொருப ஞானத்தை எனக்கு பகவான் அளித்தார் போலவும் ஒளிர்கின்ற சுயஞ்சோதி வடிவே இறைவன் என்று விளக்குகிறார் இங்கே முருகனார். இந்நிலையில் கடவுளையே தன் உருவாகக் கண்டு மகிழ்தலே பேரின்பம் என்கிறார் முருகனார் (குருவாசகக் கோவை, 292)

உண்மையில் பேரின்பம் என்பது, சித்த விருத்திகள், மனதின் முனைப்புகள் முற்றும் நீங்கிய இந்நிலையே முக்திநிலை. இந்நிலையை அடைய விருப்பு வெறுப்பு நீங்கிய ஆசைகள் அனைத்தையும் கடந்த வழியே சிறந்த பாதை என்று வழிகாட்டுகிறார்.

*பெருத்த பேரின்பம்என்பர் பேறறிஞர் சித்த*
*விருத்தி அனைத்தும் விளிவைக் - கருத்தின்*

*இராகம் துவேஷம் இரண்டும் அகன்ற*
*நிராசையே நல்ல நெறி*

*(குருவாசகக் கோவை, 374)*

இங்ஙனம் பற்றுகளையும் ஆசைகளையும் நீத்து இதயத்தில் எவ்வளவு ஆழ்கிறார்களோ அவ்வளவுக்கு பேரானந்தத்தை அவர்கள் அனுபவிப்பர். இதயத்தில் முற்றும் ஆழ்ந்து, தன்முனைப்பே முற்றிலும் நீங்கும்போது, அவர்கள் ஜீவபோதம் முற்றும் கரைந்துபோய் எல்லையில்லா பேரின்பத்தை அனுபவிப்பர்.

இந்தப் பேரின்ப நிலை பஞ்சகோசங்களால் அனுபவிக்கப் படுகிறதா? இல்லை! அது ஐந்து கோசங்களையும் தாண்டிய 'விஞ்ஞான கோசம்' ஆறின் மிஞ்சும் பேரின்ப மயம்.

'ஆன்ம நிலைத் திறன்' (குருவாசகக் கோவை, 461) என்ற அதிகாரத்தில் உண்மையான இன்பம்தான் ஆன்ம ஸ்வரூபம் என்று அறிவதே. அதைத் தவிர வேறு சுகமே உலகில் கிடையாது. இந்த உண்மையை உறுதியுடன் உணர்ந்து, இந்த 'தானே ஆன்மா' என்பதை உணர்ந்து, ஒரு நொடியும் அந்நிலையில் இருந்து விலகாது, ஆன்மப் பேரின்பத்தை அநுபவிப்பாய் என்பது குருவின் உபதேசம்.

இந்நிலையை என் குருநாதன் தனது மௌன உபதேசத்தின் மூலம் எனக்கு அன்பே சிவம் என்ற பேற்றினை அளித்து, என் உள்ளத்தே மெய்ஞ் ஞான ஸ்வரமாய் ஒளிர்கின்றான். அப்பொழுதில் இருந்து எல்லையில்லாப் பேரின்பம் என் உள்ளத்தே பெருக்கெடுத்து ஓடுகின்றது என்று ஸ்ரீ ரமண ஞான போதம் குறிப்பிடுகிறது.

*இன்பமா மோன இயல்வடிவு காட்டிஎனக்கு*
*அன்புசிவமா மெய்யருள் பேறுஅளித்த பெரு*

*நம்பன் அகத்தொளிர் மெய்ஞ்ஞான சொரூபமாய்*
*அன்புஅளைய ஊறிற்று அமுதானு பூதியே.*

*(ஸ்ரீ ரமண ஞான போதம், ஐந்தாம் பாகம், 767)*

*எல்லையற்ற இந்தப் பேரானந்தம் எத்தகையது என்ற மேஜர் சாட்விக் வினவியபோது, பகவான் அருளிய அழகான பதில்:*

*“குருவருளால் ஸ்வப்ரகாஸ அகண்ட சச்சிதாநந்த ஸ்வரபத்தை உணர்ந்த சீடன் குருவின் பாதங்களில் வீழ்ந்து வணங்கி ஒப்பற்ற இப்பெரும் அனுக்ரஹத்திற்கு என்ன கைம்மாறு நான் செய்யக்கூடும்?” என்று வினவ, குருநாதன் பரிவுடன் பார்த்து, “இவ்வனுபவம் நழுவாது காத்து என்றும் நீ ஆனந்தமயமாய் இருத்தலே, எனக்குச் செய்யும் கைம்மாறு ஆகும்” என்று கைவல்ய நவநீதம் கூறுவதை பகவான் எடுத்துக்காட்டினார்.*

*இத்தகைய பேரின்பத்தை அதைவிட்டு ஏன் நழுவ வேண்டும்? என்ற சாட்விக்கின் கேள்விக்கு “அனுபவம் திடமாகாத நிலையில் வாசனைகளால் ஈர்க்கப்பட்டு அறியாமையில் மீண்டும் விழக்கூடும்” என்று விடையிறுத்தார் பகவான். இந்தப் பேரானந்த நிலையில் இடையறாது நீடிக்கத் தடையாயுள்ளவை தன்னை உணரா அஞ்ஞானமும், சந்தேகமும், ‘உலகம் உண்மை, உலகமே நான்’ என்ற விபரீத எண்ணமும் தான். இத்தடைகள் மூன்றும் சிரவண, மனன, நிதித்யாஸனத்தால் (கேட்டல், சிந்தித்தல், தெளிவாதல்) மூலம் முற்றிலும் நீங்கும் என்கிறார் பகவான்.*

*தற்கால அனுபவத்தால் பந்தம் நீங்காது. அப்போதைக்கு பந்தம் அற்றதுபோல் தோன்றிடினும் முற்றிலும் நாசம் அடையாது. உள்ளே மறைந்துள்ள வாசனைகள், சாதுக்களை மீண்டும் உலகியலில் தள்ளிவிடும். இதற்கு இடம் கொடுக்காது, இடையறாது தன் ஆன்மாவிலேயே நிலைபெற்று நிற்பதால்,*

காலக் கிரமத்தில் வாசனைகள் அனைத்தும் ஒழிந்து போகும். இவ்வாறு தடைகள் முற்றும் அற்ற நிலையில் திட ஞானம் எம்முயற்சியும் நாட்டமும் இன்றி இயல்பாகவே ஒளிரும். அஞ்ஞானம் மீண்டும் உதிக்காது என வழிகாட்டுகிறார் பகவான் (திருஅருள்மொழி 95)

பரமஹம்ஸ யோகாநந்தரின் செயலாளர் சி.ஆர். ரைட் இதுகுறித்து ஒரு வினாவை எழுப்பினார். “அத்தகு எல்லையில்லாப் பேரானந்த நிலையை எப்படி அடைவது?” இதற்கு பகவான் தந்த விடை:

“ஆனந்தம் புதிதாக அடையப்போகும் ஒன்றல்ல. அத இப்பொழுதும் எப்பொழுதும் உள்ள ஒன்று. நம் சொருபமே ஆனந்தம். இதை உணராததால் மனதில் ஒரு குறை உணர்ச்சி உண்டாகிறது. இதுவே ஆனந்தத்தை எப்படி அடைவது என்ற கேள்வியை எழுப்புகிறது. இங்ஙனம் யாருக்கும் குறை எழுகிறது என்பதைக் கவனிக்க வேண்டும். தூக்கத்தில் ஆனந்தமாக இருக்கிறோம். விடிந்தவுடன் அது இல்லையே! ஏன்! இடையில் ‘நான்’ எனும் போலித் தோற்றத்தின் எழுச்சியே அந்த ஆன்ம ஸ்வருபத்தை மறைக்கிறது. அத்தடை நீங்கி, அந்த அகந்தையின் மூலம் எது என நாடவேண்டும். அத்தகைய நாட்டத்தால் அகந்தை தன்மூலத்தில் மறைய, தனது ஸ்வரூபமான எல்லையற்ற ஆனந்தம் தடையற்று ஒளிர்கிறது. சந்தோசப் பூட்டுகள் அனைத்தையும் திறக்கும் அற்புதச் சாவி இந்த உண்முக நாட்டமே. இதுவே எல்லையற்ற ஆனந்தத்தின் திறவுகோல். (திருஅருள்மொழி 106)

என்னுடைய ஜீவபோதமாம் மயக்கம் அப்பொழுதே அழிந்தது என்று மகிழ்கிறார் முருகனார்.

அக்ஷரமணமாலையின் பாயிரத்தில் முருகனார், “இப்பேரானந்த சாகரத்தின் வடிவமே பகவான் ரமணர். அப்பேரின்பக் கடலில் இருந்து அவர்

திளைக்கும் எல்லையற்ற ஆனந்தத்தில் அவர் வாக்கில் மலர்ந்ததுதான் அக்ஷரமணமாலைக் காவியம். அதுவே நமககுக் கதி என்று குறிப்பிடுகிறார்.

கருணாகரமுனி ரமணாரியன்
உவகையினால் சொலியது கதியாக
அருணாசலமென அகமே அறிவொடும்
ஆழ்வார் சிவனுலகு ஆள்வாரே

கருணைக் கடலான ரமண பகவான் தமது உள்ளத்தில் பொங்கிய பேரானந்தத்தில் அளித்த உபதேசத்தை கதியாகக் கொண்டு அருணாசலமே உற்ற துயையென இதயத்தில் உணவ்வொடு ஆழ்ந்து ஆன்மானுபவத்தை அனுபவிப்பர் என்கிறார் முருகனார்.

குருவாசகக் கோவையின் ஆரம்பத்திலேயே இந்தப் பேரின்ப நிலை குறித்து முருகனார் குறிப்பிடுகிறார்.

உள்ளூறவு கொண்டார்க்கு உவட்டல்உறாது ஆர்வம்எழும்
தெள்ளு பரமானந்தத் தீங்கனியாய் - உள்ளம்உறத்
தூண்டா மணிவிளக்காய்த் தூங்காதே தூங்குஉண்மை
ஆண்டான் அருளே பொருள்.

(குருவாசகக் கோவை, 17)

இறைவனிடத்தே யார் உள் ஆர்வமாய் உறவு கொள்கிறார்களோ அவர்கட்கு அள்ள அள்ளக் குறையாத பேரின்பம், இனிக்கின்ற செழுங்கனி போலவும் ஒளிர்கின்ற மணி விளக்குப் போல் உள்ளத்தில் சுடரும் சுயம் சோதியாயும் தூங்காது தூங்குகின்ற உண்மை வடிவான ஆண்டான் அருளே மெய்ப் பொருளாம்.

இதுவே பகவான் காட்டும் நேர்வழி.

உரையாடலை மீண்டும் தொடர்வோம்.

பகவான் பணியில் தங்கள்,

ராம் மோஹன்

# ஔவைக் குறள்

## ராம் மோஹன்

### 8. அர்ச்சனை

*குறள் 71: மண்டலங்கள் மூன்று மருவ உடனிருத்தி*
*அண்டரனை அர்ச்சிக்கும் ஆறு.*

*[அண்டரனை: கண்ணுக்குள் இருக்கும் சிவன்]*

*பொருள்: சூரிய, சந்திர, அக்கினி மண்டலங்களை ஒருங்கு இணைத்து, தானே கண்ணுக்குள் கண்ணாக இருக்கும் சிவனை அர்ச்சிக்க முடியும் (வெளிப்புறமான சம்பிரதாய பூஜைக்கு அவசியமில்லை)*

*"தான் சிவனுக்கு அந்நியன் என்னும் பேத பாவனையைப் பெயர்த்திடுக" என்று பகவானும் உபதேசிக்கிறார்.*

*குறள் 72: ஆசனத்தைக் காட்டி அரன்தனை அர்ச்சித்துப்*
*பூசனைசெய்து உள்ளே புணர்.*

*பொருள்: ஆன்மாவே இதயம் என்பதை உணர்ந்து அந்த 'தான்' எனும் உணர்வை, உள்முகப் பார்வையால் இதயத்தில் அமர்த்தி ஏகாக்ர பாவனையுடன், ஜீவ-ப்ரம்ம ஐக்யத்தை ஞான சாதனையால் அறிந்து, அகத்தில் நிறுத்துவதே பூசை ஆகும்.*

*குறள் 73: உள்ளமே பீடம் உணர்வே சிவலிங்கம்*
*தெள்ளியர் அர்ச்சிக்கும் ஆறு.*

*பொருள்: மனத்தையே பீடமாகவும், அறிவின் தெளிவாகிய உணர்வையே சிவலிங்கமாகவும் உணர்ந்து, தெளிந்த ஞானியர் பூசை செய்வர்.*

*குறள் 74: ஆதாரத்து உள்ளே அறிந்து சிவன்உருவைப்*
*பேதம்அற அர்ச்சிக்கும் ஆறு.*

**பொருள்:** மூலாதாரத்து உள்ளே 'நான்' என்னும் துடிப்பு இருக்கும் இடம் அறிந்து, ஐந்து பூதங்களால் ஆன வெளி உலகின் பாதிப்பை முற்றிலும் நீக்கி ஏகாக்ரத்துடன் ஆத்மாவில் நிலைபெற்று ஒடுங்குவதே அர்ச்சனை.

*குறள் 75: பூரித்து இருந்து புணர்ந்து சிவனுருவைப்*
*பாரித்துஅங்கு அர்ச்சிக்கும் ஆறு*

**பொருள்:** ரேசகம், கும்பகம், பூரகம் (உள் மூச்சு, மூச்சை அடக்கல், வெளிமூச்சு) ஆகிய பிராணாயாம முறைகளினால் ஆத்ம சாதனை பயிலும்போது ஸஹஸ்ராரத்தில் ஜீவ-ப்ரம்ம ஐக்யம் நிகழ்கிறது. இவ்வாறான பிராணாயாமப் பயிற்சியே உண்மையான அர்ச்சனை.

*பகவான்:*

*வளிஉள்ளடக்க வலைபடு புட்போல்*
*உளம் உள்ஒடுங்கும் உந்தீபற*
*ஒடுக்கும் உபாயம்ஈது உந்தீபற (உபதேச உந்தியார்)*

*குறள் 76: விளக்குறு சிந்தையால் மெய்ப்பொருளைக் கண்டு*
*துளக்கற அர்ச்சிக்கும் ஆறு.*

**பொருள்:** ஞானயோகப் பயிற்சியால் உபாதிகள் அனைத்தும் நீங்கப்பெற்று, அசைவற்ற தூய மனத்துடன் உள்முகப்பட்டு இதயத்தில் 'தான்' என்னும் ஆத்மாவை உணர்தலே அர்ச்சனை ஆகும்.

*பகவான்:*

*ஓர்த்திடும் உயிரின் சேட்டையை ஒடுக்கி*
*ஒருதனது அபிமுகம் ஆக*
*ஈர்த்ததைத் தன்போல் அசலமாய்ச் செய்துஅவ்*
*இன்னுயிர் பலிகொளும் இஃதென்*

*(அருணாசல பதிகம், 10)*

*குறள் 77: பிண்டத்தின் உள்ளே பெயராது இறைவனைக்*
*கண்டுதான் அர்ச்சிக்கும் ஆறு.*

*பொருள்: இதயக் குகையில் உள்ள ஆத்மாவில், சற்றும் அசையாத திடமனத்துடன் முற்றிலும் கரைந்து ஒடுங்கி அதனுள்ளே நிலைத்திருப்பதே அர்ச்சனை.*

*(பேராது=அசையாது. மனதில் சலனம் ஏற்படின் இறையுணர்வு தடைப்படும். அசைவுறாத மனதில் ஆத்மா தோன்றும்.*

*மாற்ற மனம் கழிய நின்ற மறையோன் (சிவபுராணம்)*

இதையே திருமந்திரம் விளக்குகிறது

*ஒண்ணா நயனத்தில் உற்ற ஒளிதன்னைக்*
*கண்ணாரப் பார்த்துக் கலந்து அங்குஇருந்திடில்*
*விண்ணாறு வந்து வெளிகண்டிட ஓடிப்*
*பண்ணாமல் நின்றது பார்க்கலும் ஆமே.*

*[ஒண்ணா நயனம்=ஞானக் கண்*
*விண்ணாறு=ஆனந்தக் கண்ணீர், ஞான கங்கை*
*பார்க்கலும்=உணர்ந்து ஒன்றாதல்]*

மேலும் மற்றொரு பாடலில் திருமூலர் கூறுகிறார்.

*புறப்பட்டு புக்குத் திரிகின்ற வாயுவை*
*நெறிப்பட உள்ளே நிர்மல மாக்கில்*
*உறுப்புச் சிவக்கும் உரோமம் கறுக்கும்*
*புறப்பட்டுப் போகான் புரிசடை யோனே.*

இதுவே திருமூலர் காட்டும் யோகமுறை

*கட்டுப்பாடு இல்லாமல் அலைகின்ற பிராணனை பிராணாயாமப் பயிற்சியால் இதயத்தில் நிறுத்தினால், அருள் கங்கை பாய்ந்து ஜீவனைத் தூய்மையாக்கும். உடலே பொன் நிறமாகும். நம் இதயத்தில் சிவபிரானும் (பிரம்ம பாவனையும்) நீங்காத நிலைபெற்று நிற்பான்.*

*குறள் 78: மந்திரங்கள் எல்லாம் மயங்காமல் உள்நினைந்து*
*முந்தரனை அர்ச்சிக்கும் ஆறு.*

**பொருள்:** மந்திரங்களை கவனம் தவறாது ஓதி, இதயத்தில் உணர்ந்து, வெளி விஷயங்களில் கருத்தைச் செலுத்தாது, இதயத்தில் ஓதும் மந்திரங்களின் பொருளில் ஆழ்ந்து இதயத்தில் பதிவதே அர்ச்சிக்கும் வழி.

*சொல்லிய பாட்டின் பொருள்உணர்ந்து சொல்லுவார்*
*செல்வர் சிவனடிக்கீழ்*
*பல்லோரும் ஏத்தப் பணிந்து (சிவபுராணம்)*
*வெளிவிடயம் விட்டு விளங்கும் அருணேசா*
*வளிஅடக்க நிற்கும் மனத்தால் - உளம்அதனில்*
*உன்னைத் தியானித்து யோகி ஒளிகாணும்*
*உன்னில் உயர்வுஉறும் ஈதுஉன்*

*(அருணாசல பஞ்சரத்னம், 4)*

*[வளி=பிராணன் உன் நினைப்பாய்]*

*குறள் 79: பேராக் கருத்தினால் பிண்டத்தின் உள்நினைந்து*
*ஆராதனை செய்யும் ஆறு.*

**பொருள்:** ஆத்மாவில் இடையறாது பதிந்து நிற்கும் மனத்தால் இதயக் குகையில் நிரந்தரமாக ஆத்மாவை தியானித்தல் ஒன்றே உண்மையான ஆராதனை.

*குறள் 80: உள்ளத்தின் உள்ளே உறப்பார்த்துஆங்கு ஒண்சுடரே*
*மெள்ளத்தான் அர்ச்சிக்கும் ஆறு.*

**பொருள்:** சலனம் அற்ற மனத்தால் கருத்தை ஒருமித்து இதயத்துள் நினைவை நிறுத்தி உள்முகத் தியானம் செய்ய ஜீவன் ஆத்மாவில் ஒன்றும். இதுவே அர்ச்சனையாகும்.

*திருமூலர் இதனை விளக்குகிறார்.*

*நாவியின் கீழ் அது நல்ல எழுத்து ஒன்று*
*பாவிகள் அத்தின் பயன் அறிவார் இல்லை*
*ஓவியராலும் அறிய ஒண்ணாது அது*
*தேவியும் தானும் திகழ்ந்து இருந்தானே*



*[நாவி=தொப்புள்; பாவிகள்=தீவினையாளர்; ஓவியர்= பிரம்மா முதலிய தேவர்கள்]*

நாபிக் கமலத்தில் இருந்து எழும் ஓங்காரம் ஒன்றே மூலதத்துவம். தீவினையாளர் இதனை அறிய மாட்டார். ஏன்! படைப்போன் ஆகிய பிரம்மனாலும் இதை அறிய முடியாது. மனத்தை அசைவுறாது இதயத்தில் நிறுத்தினால் சிவபிரானும், தேவியும் அங்கே ஒளிர்வதைக் காணலாம்.

# தமயன் அளித்த ஆன்மக் கொடை

*[ஸ்ரீவிஷ்ணு புராணத்தில் உள்ள சுவையும் பொருளும் மிக்க ஆன்மிகக் கதையை பகவான் தனது அருள்மொழி உபதேசத்தின்போது எடுத்துரைத்தார். கருத்தாழம் மிக்க அந்தக் கதையினை இப்போது காண்போம்:]*

புகழ்மிக்க இஷ்வாகு வம்சத்தில் தோன்றி நிமி அரசனின் பின்னாள் வழித்தோன்றல்களாக க்ருதத்வஜன் மற்றும் மிதத்தவஜன் ஆகியோர் பிறந்தனர். க்ருதத்வஜன் மிதிலைக்கு அரசனாகவும், மிதத்வஜன் அருகாமை நாட்டிற்கு அரசனாகவும் நல்லாட்சி புரிந்து வந்தனர். க்ருதத்வஜனுக்கு, சிறந்த ஆன்மிக ஞானம் பெற்ற கேசித்வஜனும், மிதத்வஜனுக்கு, கர்மகாண்ட அப்யாசங்களில் தேர்ச்சி பெற்ற காண்டிக்யனும் மகவாகத் தோன்றினர். ஏதோ ஒரு காரணத்திற்காக இருவருக்கும் போர் மூண்டது. கேசித்வஜனால் முழுமையாகத் தோற்கடிக்கப்பட்ட காண்டிக்யன் தன் பரிவாரங்களுடன் காட்டிற்கு ஓடிப் போனான். அடர்ந்த காட்டின் உள்ளே தன் பரிவாரங்களுடன் வசித்துவந்த காண்டிக்யன், காட்டின் எல்லையில் தன் எதிரிகள் எவரேனும் வரின் தனக்குத் தெரியப்படுத்துவதற்காக காவலர்களை நிறுத்தி இருந்தான்.

அச்சமயம், ப்ரம்ம ஞானத்தை அடையும் பொருட்டு அவனது தமையனும், மிதிலை ராஜனும் ஆகிய கேசித்வஜன் ஒரு யக்ஞம் செய்ய விரும்பினான். அந்த யாகத்திற்காக நியமிக்கப்பட்டிருந்த யாகப்பசு புல் மேய்ந்துகொண்டு இருந்தபோது, அதை அங்கே வந்த ஒரு புலி தாக்கி இழுத்துச் சென்றது. அங்கு சூழ்ந்த காவலர்கள் விரட்டி, புலி பசுவை விட்டு ஓடி விட்டது. ஆயினும் கடிபட்ட யாகப் பசு இறந்து விட்டது. “பசு இறந்து விட்டதே, இதற்கு என்ன பரிகாரம்?” என்று கேசித்வஜன், கசேரு, சுனகர் முதலிய விற்பன்னர்களை

வினவ, சனகர் “இத்தகைய கர்ம காண்டம் தொடர்பான விஷயங்களில் விற்பன்னன் உன்னால் தோற்கடிக்கப்பட்டு கானகத்தில் மறைந்து வாழும் உன் தம்பி காண்டிக்யன்தான். நீ அவனைக் கேட்பதே உசிதம்” என்றார். “சரி, முனிவரே நீங்கள் சொல்லியபடியே அவனை நாடிச் செல்கிறேன். அவன் என்மேல் கொண்ட பகையில் என்னைப் பார்த்த உடன் கொன்று விட்டால் எனக்கு எப்படியும் யக்ஞ பலன் கிடைக்கும். அன்றி, எப்படி பிராயச்சித்தம் செய்வது என்று ஒருவேளை அவன் கூறினால் நான் அப்படியே யக்ஞத்தைப் பூர்த்தி செய்து பலன் கிடைக்கும். எது நடந்தாலும் நல்லதே” என்று கூறி ரதத்தில் ஏறி, காண்டிக்யன் இருக்கும் வனத்திற்குச் சென்றான்.

கேசித்வஜன், யக்ஞகர்த்தாவாக மான்தோல் ஆடையுடன் நிராயுதபாணியாக ரதத்தில் வருவதைக் கண்ணுற்ற காண்டிக்யனின் காவல் சேவகர்கள், காண்டிக்யனிடம், “உங்களது எதிரி, ஆயுதம் இன்றி ரதத்தில் வருகிறான்” என்று தெரிவித்தனர். அதைக் கேட்ட காண்டிக்யன் கோபாவேசமாய் ஆயுதத்தைக் கையில் எடுத்துக்கொண்டு, “என் விரோதியே, என் ராஜ்யத்தை அபகரித்தது மட்டுமல்லாமல் என் உயிரையும் நீக்க பொய் வேஷதாரியாக மான் தோல் உடுத்து வந்துள்ளாய். இப்போதே உன்னைக் கொல்லப் போகிறேன்” என்றான்.

அதைக் கேட்ட கேசித்வஜன், “கோபம் கொள்ளாதே சகோதரா! நான் உன்னைக் கொல்ல வரவில்லை. நான் ஆயத்தம் செய்த யாகத்தில் எதிர்பாராது, யாகப் பசு இறந்து, தடை ஏற்பட்டுவிட்டது. அதற்கு உண்டான பிராயச்சித்தம் என்னவென்று சனகர் முதலிய ரித்விக்குகளிடம் கேட்டபோது, இதற்கு விடை தெரிந்தவன் நீ ஒருவன்தான் என்று உன்னிடம் என்னை அனுப்பி உள்ளனர். அதனாலேயே இங்கு வந்துள்ளேன். நீ பிராயச்சித்த சடங்குகள் பற்றிச் சொன்னாலும் சரி,

அன்றி கோபத்தில் என்னைக் கொன்றாலும் சரி, இரண்டையுமே ஏற்றுக் கொள்வேன்" என்றான்.

இதைக் கேட்ட காண்டிக்யன் தன் பரிவாரங்களுடன் இது குறித்து ஆலோசனை செய்தான். அவர்களோ "உங்கள் எதிரி தானாகவே வந்து நம் கையில் சிக்கிக் கொண்டுள்ளான். அவனைக் கொன்றுவிட்டால் இரண்டு ராஜ்யங்களுக்குமே நீங்கள் அதிபதி ஆகலாம். அவனைக் கொன்ற பாவத்தை நீக்க எவ்வகையான பிராயச்சித்த யாகம் செய்வது என்பது உங்களுக்கே தெரியும்" என்று சுக்ர நீதியைக் கூறினார். அதைக் கேட்ட காண்டிக்யன், "உண்மைதான். அவனைக் கொன்றால் எனக்கு இரண்டு ராஜ்யங்களுமே கிடைக்கும். அவனுக்கு ஸ்வர்க்க யோகம் கிடைக்கும். ஆனால் இது செய்யத் தக்கதா? என்னால் கொல்லப்படும் என் எதிரிக்கு நிரந்தரமான ஆனந்தம் அளிக்கும் ஸ்வர்க்கபதவி கிடைக்கும். எனக்கோ நிரந்தரமற்ற ராஜ்யமே கிடைக்கும். அது மட்டுமல்ல; சரண் அடைந்த ஒருவனைக் கொல்வதே மஹாபாவம். இதற்குப் பிராயச்சித்தமே கிடையாது. எனவே நான் அவனைக் கொல்ல மாட்டேன். அவன் சந்தேகத்தைத் தீர்த்து வைப்பேன்" என்று கூறினான். பின்னர் கேசித்வஜனை அழைத்து, அவனுக்குப் பிராயச்சித்த வழிமுறைகளைக் கூறி அனுப்பி வைத்தான்.

கேசித்வஜனும் மிதிலைக்குத் திரும்பிச் சென்று காண்டிக்யன் சொன்ன வழியில் பிராயச்சித்தம் செய்து யாகத்தை வெற்றிகரமாக முடித்தான். ரித்விக்குகளுக்கும் போதிய தட்சிணைகளையும் கௌரவத்தையும் அளித்தான். ஆயினும் அவன் மனதில் சந்துஷ்டி ஏற்படவில்லை. ஏதோ ஒரு குறை இருப்பதாகத் தோன்றியது. "ஓ! நமக்குப் பிராயச்சித்த விதிகளைப் போதித்த காண்டிக்யனுக்கு குரு தட்சிணையைக் கொடுக்கவில்லையே?" என்பது நினைவுக்கு வந்தது, குரு தக்ஷிணை அளிப்பதற்காக மீண்டும் காண்டிக்யன்

இருக்கும் வனத்திற்குச் சென்றான். அவனைப் பார்த்த காண்டிக்யன் ஒரு வேளை யக்ஞம் முடித்தபின்னர் இவன் மீண்டும் போரிட வருகிறானோ என்று ஐயப்பட்டான்.

கேசித்வஜன், "சகோதரா! தவறாக எண்ணாதே! நான் உன்னிடம் போரிட வரவில்லை. எனக்குப் பிராயச்சித்த விதிகளைப் போதித்த நீ என் குருவாகிறாய். உனக்கு எது வேண்டுமோ அதைக் குரு தட்சிணையாகத் தருகிறேன்" என்றான். காண்டிக்யனின் பரிவாரங்கள், "அரசே, இதுவே நல்ல சந்தர்ப்பம், குரு தட்சிணையாக நீங்கள் இழந்துவிட்ட ராஜ்யத்தைக் கேட்கலாம்" என்றனர்.

அதைக் கேட்டு நகைத்த காண்டிக்யன், "அன்பர்களே! நீங்கள் அர்த்தசாஸ்திரத்திலும், யுத்த சாஸ்திரத்திலும் வல்லவர்களாக இருக்கலாம். ஆயினும் நீங்கள் ஆத்ம ஞானத்தை அறியவில்லை. இந்த கேசித்வஜன் பிறவியிலிருந்தே ஆத்ம ஞானம் மிகப் பெற்றவன். அவனிடம் போய் நிலையற்ற ராஜ்ய பதவியைத் தரும்படியாகவா கேட்பது? நான் நிலையான ஆத்ம விடுதலை பெறும் வழியையே அறிய விரும்புகிறேன்" என்று கூறி, கேசித்வஜனிடம், "அண்ணா, நீங்கள் எனக்குக் குரு தட்சிணை தர விரும்பினால், நான் ஞானம் பெறத் தடையாய் உள்ள பந்தங்களையும், அஞ்ஞானத்தையும் நீக்கும் வழியை உபதேசித்து எனக்கு ஆன்ம யோகம் அடையச் செய்வீர்" என்று கேட்டான்.

அதைக் கேட்ட கேசித்வஜன், "என்னால் தோற்கடிக்கப் பட்டு வனத்தில் சிரமத்துடன் வாழ்ந்து வரும் நீ, மீண்டும் ராஜ்யத்தைக் கேட்காமல், ஞான வழியை உபதேசிக்குமாறு கேட்கிறாயே?" என்றான். காண்டிக்யன், "உன்னால் தோற்கடிக்கப்பட்டபோதே நான் அரசனாய் இருக்கத் தகுதி அற்றவன் என்பதை அறிந்து கொண்டேன். மேலும், என்னை நீ அரசன் என அங்கீகரித்தாலும், ஒரு அரசன் தானம் தர வேண்டுமே தவிர தானம் பெறக்கூடாது.

எனவே நான் ராஜ்யத்தைத் தானமாகப் பெறுதல் தவறு. எல்லாவற்றிற்கும் மேலாக, ராஜ்யம் என்பது போகத்திற்கே தவிர, யோகத்திற்கு அல்ல. ராஜனாக வேண்டும் என்ற ஆசை என்னை விட்டு நீங்கி விட்டது. நான் வேண்டுவதெல்லாம் ஆத்ம சாட்சாத்காரம் அடைய வேண்டும் என்பது ஒன்றுதான்" என்றான்.

இதைக் கேட்ட கேசித்வஜன், "நீ சொல்வது சரி, விஷய வஸ்துக்களில் ஈடுபடுவது எப்போதும் ஆத்ம சிந்தனைக்கு இடையூறுதான். எனினும் அரசன் என்ற பொறுப்பு எனக்கு இருப்பதால், கர்மங்களில் ஈடுபட வேண்டியுள்ளது. ஆனால் எப்போதும் நான் பிரம்ம நிஷ்டையில் இருக்கவேண்டும் என்பதற்காகவே இந்த யக்ஞத்தைச் செய்தேன். தாமரை இலைத் தண்ணீர்போல சித்தம் ஆன்மாவிலும் செயல் ராஜாங்கத்திலும் ஈடுபட்டுள்ளது. இதுவே என் நிலை" என்றான். குருதட்சிணையாக காண்டிக்யனுக்கு ஆத்ம தத்துவத்தையும், ஆத்ம சாட்சாத்காரம் பெறும் வழியையும் பூர்ணமாகப் போதித்தான். பின்னர் அவன் மறுத்தபோதிலும், அவனுடைய ராஜ்யத்தையும் குருதட்சிணையாக ஈந்தான். அதைப் பெற்ற காண்டிக்யனும் அதைத் தன் மகனிடமே ஒப்படைத்துவிட்டு, மீண்டும் வனம் சென்று ஆன்மிகப் பயிற்சியில் இடையறாது ஈடுபட்டான். கேசிராஜனும் ஆத்ம விசாரத்தில் ஈடுபட்டு, சகோதரர் இருவருமே ஆத்மசாட்சாத்காரம் பெற்றனர்.

பகவான் கூறிய இந்தக் கதை, பகவானின் உபதேசத்தின் சுவைப் பிழிவாகவே அமைந்துள்ளது. உபாதி உணர்வை விட்டு, செய்யும் கர்மங்கள் எவற்றையும் பற்றின்றி செய்து, இதயத்தில் சதா மனதை நிலை நிறுத்தி, உள் முகமாக நோக்கியே செயலாற்றும்போது, ஈச ஜீவன் ஒரு பொருளே ஆம் என்ற பேருண்மையை பகவான் வாக்கினில் உணரலாம்.

# பேரமைதி நிலவிய பெருநாட்கள்

## 14. பகவானின் இறுதிநாள் நிழற்படங்கள்


கடந்த சில நாட்களில், உலகின் தலைசிறந்த புகைப்படக் கலைஞர்கள் பலர்வந்து பகவானை நிழற்படம் எடுக்க முயல்கின்றனர். இந்தத் தகுதிவாய்ந்த புகைப்படக் கலைஞரின் சிரந்தாழ்ந்த வேண்டுகோட்கு இணங்கி, பகவான் அவர்கள் கேட்டபடி எல்லாம் வெவ்வேறு நிலைகளில் அமர்ந்து, தமது அருளும் அன்பும் ததும்பும் வதனத்துடன் அவர்களை நிழற்படம் எடுக்க அனுமதித்தார்.

இதையே பகவானின் பௌதிக உடலின் இறுதிநாட்கள் என்பதை எல்லோரும் அறிந்துள்ளனர் என்று நான் எண்ணினேன். எனவே நாட்கள் கடக்கு முன்னரே பகவானின் பௌதிக உருவை நிழற்படத்தில் பதிய வேண்டும் என அனைவருமே ஆர்வத்துடன் உள்ளனர். இந்த நிழற்படங்கள் உண்மையிலேயே அற்புதமானவை. அவரது உலக வாழ்வின் இறுதி நாட்களில் எடுக்கப்பட்ட இந்நிழற் படங்களில் அவரது வதனத்தில் மிகச் சிறந்த தெய்வீக அருள் ஒளிவீசித் திகழ்கிறது. அவரது முந்தைய நிழற்படங்களில் வெளிப்பட்டுத் தெரியும் அவரது ஞானத்தையும், இறைச் சக்தியைப் பிரதிபலிக்கும் முன்னாள் நிழற்படங்களைக் காட்டிலும் மேம்பட்டு நிற்கின்றன.

பகவானின் நிழற்படங்கள் சிறப்பு மிக்கவை. இவற்றுள் தலைசிறந்தவை ஏறத்தாழ பதினாறு ஆண்டுகட்குமுன் எடுக்கப்பட்டவை ஆகும். இந்தப்

படத்தில் ஒரு ஒளிவீசும் சிலுவையின் பின்புலத்தில் பிரதிபலிக்கும் ஒளி அவரது முக மண்டலத்தைச் சூழ்ந்திருக்கும் அற்புதமான படம். பகவானின் நூல்களைப் பயிலும் அத்தனை சாதகர்கட்கும் பரிச்சயமான மற்றொரு படத்தில், பகவான் புலித்தோலால் மூடப்பட்ட மேடையின்மேல் பத்மாசனத்தில் அமர்ந்து இருப்பார். இது அவரது மாதாத்திர முக க்ஷவரத்தின் பின் எடுக்கப்பட்டு இருக்கலாம். அப்படத்தில் முகம் முற்றிலும் மழிக்கப்பட்டு உள்ளது. அவரது ஒப்பிடற்கரிய ஆன்மிக சக்தி, மற்ற எந்தப் படத்தினைக் காட்டிலும் சிறப்பாக இதில் வெளிப்படுகிறது. இதனை ஆழ்ந்து நோக்கும்போது, பகவான் முகத்தில் ஒரு தீவிர உள்ளார்ந்த தன்மையைக் காண்கிறோம். இந்த வதனத்தில் நம்மை ஆண்டுகொண்டு இருக்கும் பலவீனங்கள், குறைபாடுகள், குற்றங்கள் அனைத்தும் நீங்கிய ஒரு பெரும் தூய்மையைக் காண்கிறோம். அறியாமையை முற்றிலும் கடந்து, ஐயங்கள் மற்றும் அச்சங்கள் அனைத்தும் முழுதும் நீங்கிய நிலையால் ஸத்யத்தை நேருக்குநேர் தரிசிக்கும் ஒரு மஹா வ்யக்தியை இப்படத்தில் காண்கிறோம். ஒவ்வொரு மாதமும் அவரது முக மழித்தல் முடிந்தபின்னர், ஒரு கை தேர்ந்த சிற்பியால் செதுக்கப்பட்ட சிற்பம் போன்ற அவரது முகதரிசனம் எனக்குக் கிடைத்தது. அந்த எழில் மிக்க தலையும், அதனைச் சூழ்ந்த நுண்ணிய நறுமணமும், அதனையும் தாண்டிய மிக நேர்த்தியான ஆயிரக்கணக்கான பக்தர்களின் ஆழ்ந்த பக்தி என்றும் நறுமணம் எங்கும் கமழ்கிறது.

அவர் திருமுகத்தில் நாம் சாமான்ய மனிதர்களிடம் காணக் கிடைக்காத ஒரு சீர்மையையும் காண்கிறோம். எல்லையற்ற புரிதல் உணர்வே அது. இதை வார்த்தைகளால் விவரிக்க இயலாது. அவரது திருமுன் முற்றிலும் திறக்கப்பட்டு, நம் இருப்பின் முழுமையுமே



அவரால் கண்டு அறியப்படுகிறது என்பது நமக்கு உறுதியாகத் தெரிகிறது. நம்மில் பெரும்பாலோர்க்கு பகவானைத் தவிர வேறு எவர் முன்னிலையில் நம் மனக்கதவு முற்றிலும் திறக்குமானால் அது மிகவும் சங்கடமாகத்தான் இருக்கும். ஆனால் அவர் முன்னிலையிலோ எந்த ஒரு ரகசியமும் இருக்க முடியாது; அவரிடமிருந்து ஏதேனும் ஒரு விமர்சனம் எழும் என்ற அச்சமும் இருக்க முடியாது.

நமது ப்ரக்ஞை உணர்வின் செயல்பாட்டிற்கு மிக உயர்ந்த நீதிமன்றம் அவரே நமது குற்றங்கள் அனைத்திற்கும் மன்னிப்பு வழங்கும் தலையாய சக்தி அவரே; அவரது சந்நிதியிலேயே நமது பாவங்கள் அனைத்தும் மன்னிக்கப்பட்டு நாம் முழுத்தூய்மை அடைகிறோம். இந்த சத்யத்தை நாற்பது ஆண்டுகட்கு முன்னரேயே மிக உயர்ந்த ஞானியும் தீர்க்கதரிசியும் ஆன சேஷாத்ரி சுவாமி வெளிப்படுத்தினார்.

பகவானின் பிரசித்திபெற்ற மூன்றாவது நிழற்படம். அதில் பகவானின் வதனம் வெண்மையான தாடியுடனும் தலைமுடியுடனும் ஓர் ஒளிவட்டம் சூழ்ந்தது போன்று ஒளிர்கின்றது. அதில் விவரிக்க இயலாத மிருதுத்தன்மை சுடர் விடுகிறது.

பகவான் இவ்வுலகில் அவதரித்ததன் நோக்கம் அதன் முடிவை நெருங்குகின்றது. அவரது ஆழ்ந்த உபதேசங்கள் அவரது சீடர்களாலும் அணுக்கத் தொண்டர்களாலும் வெளிக்கொணரப்பட்டு நூல் வடிவாகத் தொகுக்கப்பட்டது. அவரால் நயன தீட்சை பெற்ற சீடர் குழாம் இந்த ஞானப் பொக்கிஷத்தை அதன் பொருளைப் புரிந்து உள்வாங்கும் தகுதி படைத்தவர்க்கு அளிக்கின்றனர். இறுதியாக எஞ்சி நிற்பது தனது தத்துவத்திற்காக உயிர் நீத்து, மீண்டும் உயிர்த்தெழும் உயர்வு - இவற்றின் உள்ளார்ந்த அர்த்தம் புரிவது மிகக் கடினம்.

இதன் பரிமாணங்களை பௌதிக அளவில் காணும் வரம் எனக்கு வாய்க்கவில்லை. பகவான் தன் பூதஉடலில் அனுபவித்த பெரும் வேதனை அவரிடம் அணுக்கமாய் இருந்தோர்க்குப் பெரும் வேதனையைத் தந்தது. ஸர்வக்ஞனான அந்தப் பரம்பொருள் நமது சக்தியின் எல்லை எதுவென்றும், எதுவரை நம்மால் துயரைத் தாங்க முடியும் என்பதை நன்கு அறியும்.

பகவானின் இந்த மூன்றாவது படம், நான் ஆசிரமத்தில் கழித்த இறுதிநாள்வரை என்னுடனே இருந்தது. அதன் வரைவு மட்டுமன்றி, அதன் ஆழ்ந்த தாக்கம் என் இதயத்தில் எப்பொழுதும் நிலைபெற்று இருந்தது.

ஏப்ரல் 1950இல் தனது இறுதி நேரத்திற்கு சற்று முன்பு பகவான் தன் அணுக்க அன்பரிடம் கூறினார்: “இவர்கள் எல்லாம் நான் இறந்துகொண்டு இருக்கின்றேன் என்று கூறுகின்றனர். உண்மையில் நான் முன்னிலும் அதிக மெய்ம்மையுடன் இங்கே இருக்கப் போகின்றேன்!”

பகவானின் நிழற்படங்கள் இன்று உலகமுழுதும் பரவி உள்ளன. ஆயினும் பகவான் பூர்ணம் பேரானந்த வெளியிலிருந்து அவர் கொணர்ந்து தந்த பேரொளி பற்றியும், அவர் காட்டிய உயரிய ஆன்மபூமி பற்றியும், அதை அடைவதற்கான முட்கள் நிறைந்த கடினமான பாதை பற்றியும் எத்தனை பேர் அறிவர்? நாம் ஏன் இப்படி கண்ணிருந்தும் குருடர்களாக இருக்கிறோம்? உயர்ந்த ஆன்மிக சிகரத்தில் இடையறாது இருக்கும் பகவானின் பௌதிக முகத் தோற்றத்திலிருந்துகூட தொடர்ந்து சாந்தியும், ஆனந்தமும், ஞானமும், அன்பும் வெளிப்படுவதை உணராமல் இருக்கிறோம்!

எந்த ஒரு பேருண்மையின் ஒளிர்கின்ற கதிர்வீச்சினை ஒவ்வொரு மனிதனும் தனது இதயத்தின் அடியாழத்தில் உணர விரும்புகின்றனரோ, மாயைத் திரையால் மறைக்கப்படாத எப்போதும் ஒளிரும் ஞானக் கதிரவனை எல்லாம் தரிசிக்க விரும்புகின்றனரோ, அந்தப் பேரொளியில் நாம் மூழ்கும்போது அந்த ஞானப் பேரொளி எவ்வளவு சிறந்ததாக ஒளிரும்? அதுவே பகவானின் முகதரிசனம் நிழற்பட தரிசனம்.

# அக்ஷர மணமாலை - ஒரு தத்துவக் கருவூலம்

டாக்டர் ஏ.வி. ராஜகோபாலன்

## பகுதி-17

இறைவனை நம் மனதின் உள்ளே பார்ப்பது என்பது காலம்காலமாக இந்திய வேதாந்தத்தில் சொல்லப்படும் ஒரு ஆழமான கருத்து. இறைவன் நம்மிலும் வேறுபட்டவன்; வேறெங்கோ இருப்பவன். அவனுக்கு அடிபணிந்து வழிபாடு செய்வதே நம்முடைய செயல் என்பது பல மதங்களிலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒரு பொதுவான கருத்து. இந்தக் கருத்தையும் இந்திய வேதாந்தம் ஏற்றுக்கொள்கிறது. ஆனால் முழுமையான பரமன் நம் உள்ளேயே உறைகிறான் என்பதே நம் தத்துவ சாரமாக அமைந்துள்ளது. இவ்வாறு பரம்பொருள் என்ற தத்துவத்தை, நம்மிடமிருந்து அந்நியப்படுத்தாமல் நம்முடைய அந்தராத்மாவாகக் காண்பதே உண்மையான விடுதலை. இந்த விடுதலையே வீடு என்று சொல்லப்படும் அந்த உயர்நிலை. இதற்கு மிகச் சரியான மொழிபெயர்ப்பு மோக்ஷம் என்று வடமொழியில் சொல்லப்படுகிறது. இதை விரும்பும் ஜீவனே முமுக்ஷு ஆகிறான். இந்த நிலையில் இருப்பவன் எவ்வாறு இறைவனோடு உறவாடுகிறான் என்பதைத் திருமூலர் மிக அழகாக வெளிப்படுத்துகிறார்.

*எண்ணாயிரத்து ஆண்டு யோகம் இருக்கினும்*
*கண்ஆர் அமுதினைக் கண்டுஅறிவார் இல்லை;*
*உள்நாடி, உள்ளே ஒளிபெற நோக்கினால்*
*கண்ணாடி போலக் கலந்து நின்றானே.*

(திருமந்திரம், 603)

மிகவும் பொருள் பொதிந்த ஒரு பாடல். பல ஆண்டுகள் யோகம் முதலியவற்றால் முயற்சி செய்தாலும் அந்தப் பரம்பொருளை நமக்கு வெளியேயுள்ள ஒன்றாகப் பார்க்க விரும்புபவன் தோல்வியையே அடைகிறான். அது நமக்கு உள்ளே இருக்கும் ஒரு சுடர் விளக்கு. அதை உள்ளே நாடினால் அதன் ஒளியில் நாமும் ஒளி பெறலாம்.

கடைசி வரியை மீண்டும் பார்ப்போம். ஒளிமயமான அந்தப் பரம்பொருளை உள்ளே பார்த்தவன் எந்த நிலையில் இருக்கிறான்? கண்ணாடியில் தன்னுடைய உருவத்தைப் பார்ப்பவன் எந்த நிலையில் இருப்பானோ அந்த நிலையில்தான் இருக்கிறான் என்று ஒரு உபமானத்தால் உணர்த்துகிறார். கண்ணாடி முன் நின்றால் நம்முடைய உருவத்தைக் காண முடியும். அந்த உருவம் நம்முடையதுதான். ஆனால் நமக்கு வெளியே இருக்கிறது. விவரம் தெரிந்த வயதில் அதை நாம் நம்முடைய உருவமாகவே பார்க்கிறோம். அதையே ஒரு குழந்தை வேறொரு உருவமாகப் பார்க்கிறது. தன்னுடைய உருவம்தான் அந்தக் கண்ணாடியிலே தெரிகிறது என்பது அந்தக் குழந்தைக்குத் தெளிவாக விளங்குவதில்லை. அது அந்தப் பிம்பத்தின் பின்னால் சென்று வேறு ஒரு குழந்தை இருக்கிறது என்று நினைத்து அதைத் தேடுகிறது. ஒரு பாமரன் இந்த உணர்வைத்தான் பெறுகிறான். பரம்பொருளைத் தன்னிடமிருந்து வேறுபட்ட ஒன்றாக நினைத்து தனக்கு வெளியே தேடுகிறான்.

வேறு சில கருத்துகளையும் இந்த உதாரணத்தின் மூலம் அறியலாம். நன்கு உடை அணிந்து அழகு படுத்திக்கொண்டு நாம் கண்ணாடி முன் நின்றால் நம்முடைய உருவம் அழகாகத் தெரிகிறது. அவ்வாறு செய்யாமல் பழைய ஆடையை அணிந்து சென்றால் உருவமும் மாறுபடுகிறது. அதேபோல ஆன்ம

விசாரத்தில் முன்னேறியவன் அவனுடைய உருவத்தை அழகாகக் காண்கிறான். அது நகமும் சதையும் கொண்ட இந்த உருவம் இல்லை. அது பரம்பொருளின் பிரதிபிம்பமே. அவ்வாறு இல்லாமல் பற்றுகள் நிறைந்த இந்தச் சம்சார சேற்றில் உழன்றுகொண்டு இருப்பவன் அழகற்ற பிரதிபிம்பத்தையே பார்க்க இயலும். இதுவும் இந்தக் கண்ணாடி தத்துவத்தால் தெளிவாகிறது.

மேலும் கண்ணாடியின் குணங்களும் இந்தப் பிரதிபிம்பத்தைப் பாதிக்கின்றன. உயர்ந்த கண்ணாடி தெளிவாக உருவத்தைக் காட்டும். ஆனால் ரசம் போன கண்ணாடி தெளிவில்லாமல் குறைகளோடு கூடிய உருவத்தைக் காட்டும். இது நாம் எந்த முறையில் பிரம்மத்தை அறிகிறோம் என்பதைப் பொறுத்து அமைகிறது. 'எனக்குப் பற்றுகள் அகல வேண்டும். உலகியல் இன்பங்களில் எனக்கு நாட்டமில்லை' என்று கருதும் விவேகிக்கு நல்ல கண்ணாடியாக இது அமைகிறது. ஆனால் 'எனக்கு சொர்க்கம் வேண்டும். அங்குச் சென்று போகங்களை நான் அனுபவிக்க வேண்டும்' என்று விரும்புவோர் ரசம் போன கண்ணாடியை அடைகிறார்கள்.

ஆனால் உலகளவில் பார்க்கக்கூடிய கூடிய கண்ணாடிகளில் இருந்து இது சற்று வேறுபடும். உயர்ந்த சாதகனுக்கு தன்னுடைய நிஜ உருவம் வேறு, கண்ணாடி காட்டும் உருவம் வேறு என்ற பேதம் ஏற்படுவதில்லை. இரண்டும் ஒன்றான நிலையில் அவன் தானே பரம்பொருள் என்று உணர்கிறான். இதையே தான் திருமூலர் 'கண்ணாடி போல் கலந்து நின்றானே' என்னும் மிகவும் வலிமை பொருந்திய வரிகளால் விளக்குகிறார். உயர்ந்த நிலை இதுவே.

இந்த நிலையில் பரம்பொருள் நம் உள்ளத்தில் புகுந்து ஒளி வடிவமாகப் பிரகாசிக்கிறது. இந்நிலையில் பக்தன் பரமன் என்னும் பேதம் விலக, இரண்டாகத் தெரிந்த

தத்துவம் ஒருமைப்படுகிறது. இதில் அடிமையாகத் தோன்றிய சீவனும், ஆண்டவனாக ஆட்சி புரிந்த பரம்பொருளும் ஐக்கியமடைகின்றனர். திருமழிசை ஆழ்வாரின் 'நான்முகன் திருவந்தாதியில்' இக்கருத்தின் முழுவடிவத்தையும் காண முடிகிறது.

*இன்று ஆக நாளையே ஆக இனிச் சிறிது*
*நின்று ஆக நின் அருள் என்பாலதே நன்றாக*
*நான் உன்னை அன்றி இலேன், கண்டாய் நாரணனே;*
*நீ என்னை அன்றி இலை (2387)*

நான் உன்னை அன்றி இலேன்; நீ என்னை அன்றி இலை - என்பது தத்துவ சிந்தனைகளின் எல்லை வடிவம். சீவனும் பரமனும் ஒன்றை ஒன்று சார்ந்தவை என்னும் கருத்து மிகவும் புதுமையானது.

இதை மற்றொரு பரிமாணத்தில் ரமண பகவானும் வற்புறுத்துகிறார். 'நான்தான் செயல் ஆற்றுபவன்' என்று எண்ணுவது ரஜோ குணத்தின் வெளிப்பாடு. 'ஐ ஆம் நாட் த டூயர்' (I am not the doer) என்பது மனதை ஒருமைப்படுத்தும் வழி. பலனில் மனதைச் செலுத்தாமல் என் கடன் பணி செய்து கிடப்பதே என்று பணிபுரிவது உயர் வாழ்க்கை. இத்தகைய மனக் கேண்மை பெற்றவரை இறைவன் ஆட்கொள்கிறான்; அவர்களுக்குக் காட்சி தருகிறான். வாழ்நாளின் இறுதியில் அவருக்கு உயர்ந்த சாயுஜ்ய நிலையை அவனே அருள்கிறான்.

உபநிஷதங்களும் கீதையும் போற்றும் மார்க்கமும் இதுவேயாகும். 'செய்பவன் நான் இல்லை' என்னும் நிலையே அகங்காரம் நீங்கிய நிலையாகும். இந்நிலையில் அவன் குணங்களைக் கடந்த 'குணாதீதன்' ஆகிறான். இறைவனைக் காணும் நிலையே பக்தி மார்க்கம்-ஞான மார்க்கம் என்ற இரண்டும் சங்கமிக்கும் இடம். இவற்றுள் எந்த வழியைப் பின்பற்றினாலும்

*மனம் பண்படும். அதுவே இறைவன் விரும்பும் ஆலயம்.*

*இதற்கான பயணமே 'நான் யார்' என்னும் யாத்திரை. நான் செய்கிறேன், என்னும் எண்ணம் தோன்றும் போதெல்லாம் அந்த எண்ணத்தின் மூலத்தை ஆராயத் துவங்கினால் அந்த நான் என்பதே மறைந்துவிடும். இதுவே ரமணரின் உபதேசம்.*

*நானென்று எழுமிடம் ஏது என நாடஉள்*
*நான்தலை சாய்ந்திடும் உந்தீபற*
*ஞான விசாரம்இது உந்தீபற (உபதேச உந்தியார் 19)*

*இந்த ஞான விசாரமே ஆன்மிகப் பயணத்தின் பயன்.*

*தைத்திரிய உபநிஷதத்தில் வரும் ப்ருகு என்ற சிறுவனின் வரலாறு, இந்தப் பயணத்திற்கு நல்ல ஆரம்பம். அவன், தன்னுடைய தந்தையாகிய வருணனிடம் சென்று 'எனக்கு பிரம்மத்தை உபதேசியுங்கள்' என்று வேண்டுகிறான். தந்தை உயர்ந்த ஞானி. அவர், 'மகனே நீ தவத்தினால் மட்டுமே பிரம்மத்தை அறிய முடியும்.' என்று அறிவுறுத்துகிறார்.*

*தபசா ப்ரஹ்ம விஜிஜ்ஞாஸஸ்வ । தபோ ப்ரஹ்மேதி ।*

*அவனும் தவம் செய்கிறான். முதலில் உடலின் தேவைகள் பூர்த்திசெய்யும் அன்னமே பிரம்மம் என்ற எண்ணத்தை அடைகிறான். மேலும் மேலும் தவம்செய்து, பிராணன், மனம், உயர் அறிவு இவற்றை பிரம்மம் என்று உணரத் தொடங்குகிறான். ஆனால் தந்தை மேலும் மேலும் தவத்தில் ஈடுபடப் பணிக்கிறார். இறுதியில் நமக்குள்ளே உறையும் இறைவனை நாம் உணர்ந்து அந்த ஆனந்தத்தில் ஈடுபடுவதே ஞானம் என்று அறிகிறான்.*

*ஆநந்தோ ப்ரம்மேதி வ்யஜானாத் ।*

*உயர்ந்த எண்ணத்துடன் அவன் செல்லும் பாதை நமக்கெல்லாம் ஒரு படிப்பினை. எந்த ஒரு*

முயற்சியிலும் பலன் கிட்டத் தொடர்ந்து முயல வேண்டும். இறைவனை அறிதல் என்னும் இந்த மாபெரும் பணி எடுத்தவுடனேயே பலனைத் தராது. ஆனால் விடாது உழைப்பவனுக்கு வெற்றி நிச்சயம்.

சாந்தோக்ய உபநிஷதத்தில் இத்தகையோனுக்கு ஒரு விளக்கம் கிட்டுகிறது. உயர்ந்த ஆத்ம அறிவைப் பெற்றவன் "ஸ்வராட்" ஆவான். அவன் இந்த ஆத்மாவிடமே, இன்பத்தையும், விளையாட்டையும், உறவையும், பேரானந்தத்தையும் அடைகிறான். அவன் தன்னைத்தானே கட்டுப்படுத்தி ஆள்பவனாவான். தங்குதடையின்றி அவன் எங்கும் சஞ்சரிக்கக் கூடியவன். இந்த விளக்கமே தத்துவ ஞானிகளால் பெரிதும் போற்றப் படுகிறது.

இந்த மார்க்கம் ஞான மார்க்கம் என அழைக்கப்படும். இறைவன் நமக்குள்ளேயே அந்தர்யாமியாக விளங்குகிறான் என்பதே இதன் தாத்பரியம். அவனை, உலகப் பற்றுகளை நீக்கி மனதை உள்ளே திருப்புவதால் மட்டுமே காணமுடியும் என்பது இந்த நீரோட்டத்தின் பொதுக் கருத்து. இதனை மற்ற உபநிஷதங்களிலும் பார்க்க முடிகிறது.

இந்தப் பாதை அத்தனை சுலபமானதல்ல. பலர் இப்பாதையில் செல்லும்போது உலகியல் கவர்ச்சிகளால் ஈர்க்கப்பட்டு வீழ்ந்ததைப் பார்க்கிறோம். யயாதி அனைத்துக் கல்வியையும் முறைப்படி கற்றவன். ஆனால் ஒரு காலகட்டத்தில் அவனும் சிற்றின்பத்தில் தன்னை இழக்கிறான். திருதராஷ்டிரன் உயர்குலத்தில் பிறந்தவன். தர்ம சாஸ்திரங்களைக் கற்றறிந்தவன். விதுரர், சனத்சுஜாதர் போன்ற மகான்களிடம் அடிக்கடி போதனை பெற்ற பாக்கியசாலி. இருப்பினும் தன் புதல்வர்களிடம் கொண்ட அளவு கடந்த பாசம் அவன் புத்தியை மயக்கித் தவறான பாதையில் செலுத்துகிறது. அரங்கநாதனையே ஒரே பற்றாகக்

கொண்ட தொண்டரடிப்பொடி ஆழ்வார் மனதையும் சிற்றின்பப்பாதை சிலகாலம் திசை திருப்பிய வரலாற்றையும் பார்க்கிறோம். இந்த உதாரணங்கள் இந்த ஞானப் பாதையில் உள்ள தடைக்கற்களை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன. இதை நாவுக்கரசர் ஒரு படகின் பயணமாகக் காட்டுகிறார்.

*மனமெனும் தோணி பற்றி மதியெனும் கோலை ஊன்றிச்*
*சினமெனும் சரக்கை ஏற்றிச் செறிகடல் ஓடும் போது*
*மதனெனும் பாறை தாக்கி மறியும்போது அறியவொண்ணாது*
*உனையுனும் உணர்வை நல்காய் ஒற்றியூர் உடைய*
*கோவே. (4.46.2)*

மனமெனும் படகில் அறிவைக் கோலாக ஊன்றி ஆழ்கடலில் செல்லும் நிலையில் அகங்கார-மமகாரங்கள் அதைத் தாக்குகின்றன. படகு நிலைகொள்ளாமல் ஆடுகிறது. அந்நிலையில் இறைவனே உறுதுணையாக நின்று என்னைக் காக்க வேண்டும் என ஆண்டவனை வேண்டுகிறார். மனதில் நிற்கும் அழகிய உருவகம். மதி என்பது பெருமளவுக்கு உதவும் ஒரு கோல். ஆயினும் அதற்கும் சில வரையறைகள் உண்டு. அந்த எல்லையைத் தாண்டினால் மனம்-மதி என்னும் இந்தக் கூட்டமைப்பு திறமையாக வாழ்க்கைப் படகைச் செலுத்த இயலாது. கடோபநிஷதம் கண்ட தேரின் வடிவமைப்பு சற்று வேறுபட்டது. அதில் புலன்கள் என்னும் குதிரைகள், புத்தி என்னும் சாரதியின் மூலம் செலுத்தப்படுகின்றன. மனம் கடிவாளமாக இருக்கிறது. இந்த நிலை ஒரு உயர்ந்த சாதகனின் நிலை. ஆனால் சாமானியனுக்கு அந்த அளவு கட்டுக்கோப்பு இராது. அவனுக்கு மனமே முக்கிய சாதனம். அறிவு அதற்கு உதவி செய்யும் கருவி. ஆகையால் இந்த இரண்டு உருவகமும் வெவ்வேறு நிலையில் நமக்கு ஆன்ம விளக்கம் அளிக்கின்றன.

ஜான் பன்யான் என்னும் ஆங்கிலக்கவி 1678 ஆம் ஆண்டு எழுதிய 'த பில்க்ரிம்ஸ் ப்ரோக்ரஸ்' (The Pilgrim's Progress) என்னும் கவிதை ஒரு நல்லோனின் ஆன்மிகப் பயணத்தை அழகுபட விவரிக்கிறது. அவன் Hill of Difficulty, Valley of Humiliation, Valley of the Shadow of Death, Vanity Fair, போன்ற துன்பங்களும் சபலங்களும் நிறைந்த பாதையில் பயணிக்கிறான். Celestial City என்னும் உயரிய இலக்கை நோக்கிச் செல்லும் அவன் அவற்றை எவ்வாறு சமாளிக்கிறான் என்பது சுவையானது.

ரமண பகவான் அக்ஷர மணிமாலை என்ற இந்தப் பாடல் தொகுப்பில் சொற்களை மிக எளிமையாக அமைத்துத் தருகிறார். அவற்றின் பொருள் சுலபத்தில் விளங்குகிறது. இதற்கு விளக்கவுரை எழுதுமாறு அணுக்கத் தொண்டர்கள் பலமுறை கேட்டும் அவர் அதைச் செய்ய மறுத்து விடுகிறார். இந்தப் பாடல்களின் பொருள், பக்தர்களின் மனப்பக்குவத்தாலேயே உணரக் கூடியது என்பது அவருடைய கருத்து போலும். இதை ஆராய்ச்சி செய்தால் நமக்கு வேண்டிய முக்கியமான சில சித்தாந்த பேருண்மைகள் இதில் இருக்கின்றன என்பது புலனாகும்.

ஒரு எளிய சம்சாரி ஆன்மீகப் பாதையிலே தன் பயணத்தைத் துவக்குகிறான். அவனுக்குப் பல இன்னல்கள் நேருகின்றன. ஆரம்பத்தில் பரம்பொருளை அடைய வேண்டும் என்கிற லட்சியம்கூடத் தெளிவாக இருப்பதில்லை. அவன் இல்வாழ்க்கையில் சுகம் இல்லை என்று உணர்ந்து இந்தச் சம்சார பந்தத்தில் இருந்து வெளிப்பட விழைகிறான். அவனை இந்திரியங்கள் தன்வழியே இழுக்கின்றன. அவனுடைய உறுதி தளர்வு அடைகிறது. அவற்றைத் தன் வசம் அடக்கிவைக்க ஒரு ஆன்மிக சக்தி அவனிடம் இல்லை. இந்த நிலையில் மணிமாலையின் பதினொன்றாம்

பாசுரத்தில் அவனுடைய உள்ளத்தின் குமறலை மிக அழகாகப் பார்க்க முடிகிறது.

*ஐம்புலக் கள்வர் அகத்தினில் புகும்போது*
*அகத்தில் நீ இலையோ அருணாசலா (11)*

இவன் பயணத்தைத் தொடர்கிறான். போகப்போக உள்ளத்தில் தெளிவு பிறக்கிறது. இந்திரியங்களைத் தன் போக்கில் செல்லாமல் தடுத்து நிறுத்தும் பணியில் அவன் ஈடுபடுகிறான். அதனால் அவனுக்கு உள்ளத்தில் ஆனந்த நீரூற்று பெருகும் என்ற பெரும் நம்பிக்கை தோன்றுகிறது. சிந்தனையும் சொற்களும் உள்ளடங்க, பேரின்பப் பேராற்றில் நீராட விரும்புகிறான். இந்த உள்ளப் பாங்கினை அடைய அவனுக்கு மேலும் இருபது பாடல்கள் 'யாத்திரை' செய்ய வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது.

*சுகக் கடல் பொங்கச் சொல்லுணர்வு அடங்க*
*சும்மா பொருந்திடுஅங்கு அருணாசலா (31)*

இந்தச் சொல் மற்றும் உணர்வு என்னும் இரண்டும் இந்திய தத்துவ ஆராய்ச்சியில் முன்பே குறிப்பிடப் பட்டுள்ளன. 'மனமும் வாக்கும் பிரம்மத்தை அடைய முடியாமல் திரும்பி வந்தன' என்று உபநிஷதம் குறிப்பிடுவதை காண்கிறோம்.

ஆனால் ஞான மார்க்கம் மூலமாக அடையமுடியாத அந்தப் பிரம்மத்தை, அறிவொன்றுமில்லாத ஆயர் குலத்துப் பெண்கள் பக்தியினால் அடைந்து விடுகிறார்கள். ஆண்டாளின் இனிய சொற்களில் இதைக் காண முடிகிறது, 'வாயினால் பாடி மனத்தினால் சிந்திக்கப் போய பிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்' என்ற கருத்து நம்பிக்கை அளிக்கிறது.

இதற்குப் பத்து நூற்றாண்டுகளுக்குப் பின்னர் பகவானின் அருள் வாக்கில் 'சொல், உணர்வு அடங்க' என்று வரிகளில் இதே கருத்து பிரதிபலிக்கிறது.

பயணம் தொடர்கிறது. பற்றுகள் விலகத் தொடங்கிய அந்த நேரத்தில் உள்ளத்தில் தெளிவு பிறக்கிறது. உலகின் மிகப்பெரிய தத்துவம் விளக்கம் அவனுக்கு கிடைக்கிறது. 'நான் வேறு; எனக்குள் உறையும் அந்தப் பிரம்மம் வேறு' என்ற எண்ணம் நீங்குகிறது. இரவு-பகல், காலம்-நேரம் என்ற பரிமாணங்கள் விலகிப் போகின்ற அந்த ஒப்பற்ற நிலையில் அவன் பிரம்மத்துடன் ஐக்கியமாகி, பிரம்மத்துடனேயே பேசுகின்ற அந்த 'ஸ்வராட்' என்னும் நிலையை அடைகிறான். இதை வருணிக்கும் சாந்தோக்கிய உபநிஷத்து சொல்கிறது,

*ஆத்மரதி-ராத்மக்ரீட-ஆத்மமிதுன-ஆத்மானந்த:*
*ஸ: ஸ்வராட் பவதி (7.25.2)*

இந்த நிலையை சொற்களால் வர்ணிப்பது கடினம். அனுபவத்தால் மட்டுமே உணர முடியும். எப்படி ஒருவன் தன்னுடனேயே பேசி, கூடி, குலாவி, ஆனந்தத்தை அடைய முடியும் என்பது அந்த நிலையில் வீற்றிருந்து ஆன்மீக உலகில் ஏகசக்ராதிபதியாக ஆட்சி செய்யும் அந்த யோகிகளுக்கு மட்டுமே புரியும். இதை ரமணரின் வாக்கில் பார்ப்போம்,

இராப் பகல் இல்லா வெறு வெளி வீட்டில்
ரமித்திடுவோம் வா அருணாசலா (91)

இதில் மூன்று முக்கிய வெளிப்பாடுகளைப் பார்க்கிறோம். முதலாவது 'ராப் பகல் இல்லாத' என்ற கால அளவு. எங்கு இரவு பகல் இல்லையோ, அங்கு நாள், மாதம், வருடம் போன்ற காலக் குறியீடுகள் இருப்பதில்லை. இரண்டாவது, 'வெறுவெளி வீட்டில்' என்னும் இடம் குறித்த பரிமாணம். ஆன்மா, உடல் என்னும் கூட்டிலிருந்து விடுபட்ட நிலை வீடு எனப்படும். வெறுவெளி என்பது எல்லையற்ற தகராகாசம் என்னும் ஆன்மீக உலகம். பற்றுகள் விட்டுப்போன நிலை. இந்தச் சொற்கள் அந்த

சாதகனின் மனோநிலையைப் பிரதிபலிக்கின்றன. 'நான் செய்பவன்' எனும் அகங்காரம் நிலையும், 'இது என்னுடையது' எனும் மமகார நிலையும் விலகிப் போக, அவன் அடைந்து இருப்பது எல்லையற்ற ஆனந்த நிலை.

மூன்றாவது நிலை நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. இத்தகைய நிலையை அடைந்தவனுக்கு பிரம்மத்துடன் எத்தகைய உறவு இருக்க முடியும்? இதை ரமணர் ஒரே சொல்லில் வெளிப்படுத்துகிறார். அதுதான் 'ரமித்திடுவோம் வா' என்பது. வாழ்வின் இன்ப துன்பங்களில் சிக்கிக்கொண்டு தவித்த ஒரு ஆன்மாவுக்கு எத்தகைய உயர்ந்த நிலை கிடைத்துவிட்டது!! பரப்பிரம்மத்தை என்னுடன் விளையாட வா என்று அழைக்கும் ஒரு பெரிய பேற்றை அல்லவா அடைந்து விட்டது! இதைத்தான் சாந்தோக்கிய உபநிஷத்து 'ஆத்ம ரதி:, ஆத்ம க்ரீட:'என்ற வரிகளில் விளக்கியது நமக்கு இப்பொழுது புலனாகிறது.

உபநிஷத்துக்கள் காட்டிய பாதையை மிகவும் எளிய சொற்களில் பகவான் நமக்கு 91வது பாடலில் விளக்குகிறார். இந்த நிலையை அடைந்தவனே தத்துவ நூல்களில் 'ஸ்வராட்' என்று போற்றப்படுகிறான் என்பதை உணரும்போது நம்மை அறியாமலேயே நமக்குப் பேரானந்த உணர்வு உள்ளூர ஏற்படுகிறது. 11ஆவது பாட்டில், திக்கு திசை தெரியாமல் புலன்கள் என்னும் கள்வர்களால் அலைக்கழிக்கப்பட்ட இந்த அப்பாவி ஜீவாத்மா, 91வது பாட்டில் எத்தகைய உயர்ந்த நிலையை அடைந்து விட்டது!! இதற்குக் காரணம் அந்தப் பயணமும் அதில் அந்த ஜீவன் காட்டிய முனைப்பும் தான்.

இதுவே பிரம்மத்தை அடையும் வழி.

# சப்ரிஜிஸ்திரார் நாராயண ஐயர்

## வி.நிரஞ்சன்

*(சென்ற இதழின் தொடர்ச்சி)*

ஞாயிறுதோறும் ஐயர் பகவானின் தரிசனத்திற்கு வரும்பொழுது சுவையான பஷணங்களைக் கொண்டுவருவார். லலிதா அம்மா பக்தி சிரத்தையோடு அப் பக்ஷணங்களைப் பண்ணி அனுப்புவார். ஞாயிற்றுக் கிழமைகளில் ஐயரின் ஆசிரம வருகை பக்ஷணங்களோடு இணைந்துவிட்டது. ஆசிரமத்தில் ஒரு ஞாயிற்றுக் கிழமையில் பக்ஷணம் பண்ணலாமா என்று யோசிக்கும் சமயம் பகவானே, "ஐயர் இன்று வருகின்றார். பண்டங்கள் வரும். ஆதலால் சிரமப்பட வேண்டியதில்லை" எனக் கூறிவிடுவார். பகவானின் கூற்றை மெய்ப்பிக்கும் ஐயரது பண்டங்கள் கூடிய வருகை.

பக்தர்களோ பகவானுக்கு பண்டங்களைக் காணிக்கையாகக் கொடுக்கின்றனர். காணிக்கை கொடுத்தாலும் கொடுக்காவிட்டாலும், அனைத்துப் பக்தர்களுக்கும் கைம்மாறு வேண்டாது பகவானோ அவர்களுக்குத் தன்னையே அதாவது சொருபானுக்கிரகத்தையே அருளுகின்றனர் என்பது எண்ணி மகிழத்தக்கது.

பகவான் பரிவு மேலிட்டு ராமனாத பிரம்மச்சாரிக்கும், டி.கே. சுந்தரேச ஐயருக்கும் தன் கையினாலேயே பரிமாறி அவர்கள் தாபத்தைத் தணித்துள்ளார். இது போன்றே பகவான் ஒரு சமயம் பரிவு மேலிட்டு ஐயருக்கும் அவரது குடும்பத்தினருக்கும் பண்டம் ஒன்று சமைத்துக் கொடுத்து அனுப்பினார். அதிகாலை வெளி ஊரிலிருந்து வந்து சேர்ந்தார் ஐயர். முந்திய

*நாள் பகவானது ஜயந்தி (அல்லது அது போன்ற விழா) கொண்டாடிய பிறகு அதிகமாக வேலை செய்ததால் ஆசிரமத்தில் அனைவரும் உறங்கிக் கொண்டிருந்தனர். மூன்று மணி நேரமே இருந்து மீண்டும் காலையிலேயே பணிக்குப் பயணிக்க வேண்டியவராய் இருந்த ஐயரை உணவு ஏதும் கொடுக்காமல் வெறுமே அனுப்ப பகவானின் கனிவு மறுத்தது.*

*ஐயரைக் கூட்டிக்கொண்டு அடுக்களைக்குள் நுழைந்தார் பகவான். அனைத்துப் பாத்திரங்களும் காலியாய் இருந்தன. ஆனால் தொடர்ந்து பகவான் பாத்திரங்களை எடுத்துப் பார்த்த வண்ணம் இருந்தார். ஒரு பாத்திரத்தில் ஏதோ இருப்பது கண்டு கையை விட்டு எடுத்துப் பார்த்தார். பாதாம் பருப்புக்கள் இருந்தன. உடனே சற்றே கனன்று கொண்டிருந்த அடுப்பை ஊதி தீயூட்டி வாணலியை அடுப்பின் மேல் வைத்து மிஞ்சி இருந்த நெய்யை அதில் விட்டு பாதாம் பருப்புக்களை சிவக்க வறுத்து ஐயருக்குச் சாப்பிடக் கொடுத்து மிஞ்சிய பாதாம் பருப்புக்களை இலையில் வைத்து மடித்துக் காகிதத்தில் கட்டி அவரது வீட்டினருக்கும் ஆசிரமப் பிரசாதமாகக் கொடுத்து அருளினார் பகவான். பகவான் எடுத்துக்கொள்கிற சிரமம் குறித்து வருந்திய ஐயரை, தனது பரிவான வார்த்தைகளால் சாந்தப்படுத்தி ஊருக்கு அனுப்பியருளினார் பகவான். பகவானின் கனிவால் மனம் நெகிழ்ந்த ஐயர் கண்களில் நீர் மல்கியது. ஐயரும் சரி அவரது மனைவியும் பிள்ளைகளும் சரி, பகவானின் பரிவிற்குப் பாத்திரராகியது அவர்களது புண்ணியமே.*

*முதலியார் பாட்டி வந்துகொண்டிருப்பதைக் காணும் பொழுதே பகவானின் கண்கள் மலர்ந்து காணப்படும் என்று அண்ணாமலை சுவாமி குறிப்பிடுகின்றார். “தூய்மன மொழியர் தோயும் மெய் அகமா”கிய பகவான் நாராயண அய்யரை குருபக்தியிலும் விசுவாசத்திலும் வருகையிலும் பக்குவமாக்கி அவருக்கு அருள் புரியத் திரு உளம் கொண்டனர் போலும்.*



ஒருமுறை நாராயண ஐயர் புகைவண்டியில் தாமதமாக மதியம் ஒரு மணி அளவில் வந்து சேர்ந்தார். நேராக பகவான் அமர்ந்திருக்கும் கூடத்திற்கு விரைந்தவரை வாசலில் நின்றிருந்த உதவியாளர் இரண்டு மணிக்குத்தான் உள்ளே செல்ல அனுமதி என்று ஆணையிட்டுள்ளனர் எனச் சொல்லிவிடவே ஐயரும் இரண்டு மணி வரை காத்திருந்து பகவானைக் காண உள் நுழைந்தார். “ஒரு மணி அளவில் இங்கே வந்ததைப் பார்த்தேன். உடனே வருவீர்கள் என நினைத்தேன்,” என்றனர் பகவான். அதற்கு மதிய உணவிற்குப் பின்னர் பகவான் சற்றே ஓய்வு எடுத்துக்கொள்ள நிர்வாகம் செய்த ஏற்பாட்டின் படி இரண்டு மணி வரை யாரையும் அனுமதிக்கவில்லை என்று தனக்குக் கிடைத்த செய்தியை பகவானிடம் கூறியிருக்கின்றார் ஐயர். ஐயரின் வருகையில் பகவான் கவனம் உள்ளவராய் இருந்தனர் என்பது இதிலிருந்து தெளிவாகின்றது.

இதன் விளைவாக அடுத்த நாள் நிகழ்ந்த நிகழ்ச்சி பகவானுடைய காருண்ணியத்தைத் தெளிவாகக் காட்டுகின்றது.

அடுத்த நாள் மதியம் உணவின் பின்னர் பகவான் கூடத்திற்குள் நுழையாமல் வாசலிலேயே அமர்ந்துவிட்டார். சற்றே பொறுத்திருந்த உதவியாளர் பகவானை உள்ளே சென்று ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டினார். அவருக்கு பகவான், "இரண்டு மணி வரை யாரும் உள்ளே செல்லக் கூடாது என்பது கட்டளை. இரண்டு மணி வரை நான் வெளியே இருக்கக்கூடாது என்று கட்டளை ஒன்றும் இல்லையே," என்று பொருள்படக் கேட்டனர். பின்னர் பகவானே விளக்கமும் அளிக்கின்றார். "எவ்வளவோ சிரமப்பட்டு பல வாகனங்களில் பயணித்து மக்கள் இங்கே வருகின்றனர். அந்தஅந்த நேரங்களில் அவர்கள் வந்து சேர்கின்றனர். ஆசிரம விதிகள் அவர்களுக்கு என்ன தெரியும்? எந்த நேரத்தில் வந்தால் உள்ளே செல்லலாம் என்று அவர்களுக்கு என்ன தெரியும்? இதை எல்லாம் கருத்தில் கொள்ளாமல் அவர்கள் தாராளமாக உள்ளே வருவதைத் தடை செய்வது நன்றன்று," என்னும் பொருள் படும்படி பகவான் கனிவுடன் பகன்றனர். விளைவு உடனேயே பகவானைக் காணுவதற்குப் போடப்பட்ட தடை விலகியது. இவ்வாறு ஆசிரமத்தின் திருக்கோயில் வாசல் தடை இன்றித் திறந்து கொண்டது. இந் நன்னிகழ்ச்சியில் நாராயண ஐயரின் பங்கும் இருப்பது உன்னி மகிழத்தக்கது.

நாராயண ஐயர் தனது ஐயங்களைப் பகவானிடம் எழுப்பி மனம் தெளிந்திருக்கின்றார். தனது குறைகளை பகவானிடம் முறையிட்டு பகவானின் வழிகாட்டுதலால் ஆறுதல் அடைந்திருக்கின்றார். சாதக நெறிகளை பகவானிடமே கற்று அவற்றின் வழி இறுதி வரை வாழ்ந்திருக்கின்றார். நம் அனைவருக்கும் பாடமாக அமையும் அவற்றை அறியலாம்.

# பொது சுகாதார நெருக்கடியின்போது பகவான்

*பகவான் ரமண மகரிஷிகள் தமது அன்பர்களுக்கு உபதேசம் மட்டும் செய்யாமல், வாழ்ந்தும் காட்டியிருக்கிறார். தற்போது உலகையே ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கும் கொரொனா வைரசால் உலக மக்கள் அனைவரும் தங்களைத் தனிமைப்படுத்திக் கொண்டு இருக்க வேண்டிய நிர்ப்பந்தம். அசாதாரண இன்றைய ஊரடங்கு சூழல் பகவான் இருந்த காலத்தேயும் நிலவியது. 1905/1906-ஆம் ஆண்டுகளில் 'பிளேக்' என்னும் கொள்ளை நோய் திருவண்ணாமலையை ஆட்டிப் படைத்தது. அச் சமயத்தில் இதுபோன்ற ஊரடங்கு நிலவியது. சுமார் 6 மாத காலங்கள் பகவான் தன்னைத் தனிமைப்படுத்திக் கொண்டு இருந்த சமயத்தில் நிகழ்ந்த சில சுவையான நிகழ்ச்சிகளை இங்குக் காண்போம்:*

## பச்சையம்மன் கோயில் வாசம்

பச்சையம்மன் கோயில். இக்கோயில் மலையின் வடகிழக்குப் பகுதியில் அடிவாரத்தையொட்டி அமைந்துள்ளது. இது மிக அழகான கோயிலாகும். உள்ளே அம்மன் சிலை, வெளியே கிராமத்துத் தேவதைகள், சப்த முனிகள், ஐயனார் சிலைகள் மேலும் கோயிலுக்கு வெளியே இரு குளங்கள் அமைந்து அழகாகக் காட்சி தரும் ஸ்தலம் இடம்.

பார்வதி தவம் செய்யத் திருவண்ணாமலை அடைந்த பொழுது அவள் முதலில் கௌதம ஆசிரமத்திற்குச் சென்றாள். பின்னர் அருகிலிருக்கும் பச்சையம்மன் கோயிலைத் தேர்ந்தெடுத்து அங்குத் தவம் இயற்றினாள் என்பர். அவளது நிறம் பச்சை நிறம், அதாவது மரகத நிறமாக இருந்தது. பார்வதி பர்ணசாலை அமைத்து தவம் செய்த இடத்திற்கு அருகில் இருப்பதால் இக்கோயில் பச்சையம்மன் கோயில் எனப் பெயர் பெற்றது என்பர்.

## பிளேக் நோய்

1905-06 ஆம் ஆண்டு திருவண்ணாமலை நகரத்தை கொடிய பிளேக் நோய் தாக்கியபோது அன்பர்களும் அரசு சுகாதார அதிகாரிகளும் பகவானை, திருவண்ணாமலை நகருக்கு வெளிப்புறமாக அமைந்திருந்த பச்சையம்மன் கோயிலில் சென்று வசிக்குமாறு வேண்டினர். அதற்கிசைந்து அன்பர்களுடன் பச்சையம்மன் கோயிலுக்கு அருகிலுள்ள மண்டபத்தில் தங்கியிருந்தார். பகவானும் அன்பர்களும் இக்கோயில் அருகில் இருந்த இரண்டு குளங்களில் நீராடி தங்களுக்கு வேண்டிய நீரை எடுத்துக் கொள்வதுண்டு.

## குளவியும் இயற்கையின் அற்புதங்களும்

பகவான் இயற்கையை மிகவும் உன்னிப்பாகக் கவனிப்பார். பச்சையம்மன் கோயிலில் ஒரு தூணில் குளவியொன்று ஐந்தாறு கூடுகள் கட்டுவதைப் பார்த்தார். அதில் ஒவ்வொன்றிலும் ஐந்தாறு முட்டைகளை இட்டுப் பறந்து செல்வதையும் கவனித்தார். அக்கூட்டை பலநாள் நோக்கி வந்தார். போன குளவி திரும்பவில்லை. வேறு எவ்விதமான கறுப்பு வண்டும் அவ்விடம் வரவில்லை. ஆனால் என்ன ஆச்சரியம்! பதினைந்து நாட்கள் கழித்து கூட்டைத் திறந்து பார்த்தபோது, ஐந்து முட்டைகளும் ஒன்றாகச் சேர்ந்து குளவிபோல ஒரு வெள்ளை ஐந்து

இருந்தது. அது கீழே விழுந்து அதிர்ச்சியில் சிறிது நேரம் அசைவற்றுக் கிடந்து பின்னர் மெதுவாக ஊர்ந்து சென்றது. அதன் நிறம் சிறிதுசிறிதாக சிவப்பாக மாறியது. அதன் இருபக்கமும் இரு புள்ளிகள் இருந்தன. சிறிது நேரத்தில் அப்புள்ளிகள் இறக்கைகளாக மாறின. இவ்வாறு கீழே விழுந்த வெள்ளைப் பூச்சி ஒரு முழு குளவியாக மாறிப் பறந்து சென்றது. இந்நிகழ்ச்சியை பகவானே தன் அன்பர்களிடம் விவரித்தார்.

## ஆயிரம் கண்கள் கொண்ட மலையாளத் துண்டு

பகவான் பச்சையம்மன் கோயிலில் இருந்தசமயம் அவருக்கு யாரோ ஒரு அன்பர் மலையாளத் துண்டைக் கொடுத்தார். குளித்தபிறகு அத்துண்டினால் உடலைத் துடைத்துக் கொள்வார். அது பல இடங்களில் கிழிந்து நார்நாராகக் காட்சியளித்தது.

தனது கிழிந்த துண்டை ஒருபோதும் மற்றவர்கள் முன் பிரிப்பதில்லை. அந்தத் துண்டை பந்தாகச் சுருட்டி உடலைத் துடைத்துக் கொள்ளப் பயன்படுத்துவார். அதைத் துவைத்து பாறைகளுக்கிடையே உலர்த்துவார். தமது கோவணத்துண்டு கிழிந்திருக்கும்போதும் முன்பின் மாற்றி அணிவார். காட்டிலிருக்கும் முள்ளைக் கொண்டு துணியில் இருந்து நூலை எடுத்து அதை ஊசியாக உபயோகித்து கிழிசலைத் தைத்துக் கொள்வார்.

தற்செயலாகக் கிழிந்த துண்டைக் கண்ட அன்பர்கள் பதறி இதுகாறும் எங்களுக்குத் தெரியாமல் போனதே என்று வருந்தி, அவருக்குத் துண்டுகளை அளித்தபோதும் தனக்கு வேண்டிய ஒரு துண்டு மற்றும் கோவணத்திற்கு வேண்டிய துணியை மட்டும் எடுத்துக் கொள்ள இசைந்தார்.

இந்நிகழ்ச்சியையே முருகனார் தமது ‘ரமண சந்நிதி முறை’யில் ஒரு பாடலில் ஏன் பகவான் பல துளைகள் கொண்ட துண்டை உபயோகித்தார் எனில், ஆயிரம்

கண்கள் கொண்ட இந்திரனே அத்துண்டாக வந்து பகவானுக்குச் சேவை செய்தான் என்று சுவைபடக் கூறியுள்ளார்.

ஒருநாள் மாடு மேய்க்கும் சிறுவன் இத் துண்டைப் பார்த்துக் கேலியாக, 'சுவாமி, கவர்னருக்கு இந்தத் துண்டு வேண்டுமாம்?' என்றான். பகவானும் பதிலுக்கு "நான் தரமாட்டேன் என்று அவரிடம் சொல்" என்று நகைச்சுவையாக விடையிறுத்தார்.

## சிறுத்தை அடிபணிதல்

சென்னையைச் சேர்ந்த ரங்கசாமி ஐயங்கார் பச்சையம்மன் கோயிலில் பகவானைக் காண வரும்பொழுது, நண்பகல் நேரம். குளித்துவிட்டு உணவருந்த வருமாறு பக்தர்கள் கூறவே, அருகிலிருந்த குளத்திற்கு ஐயங்கார் குளிக்கச் சென்றார். திடீரென்று கோயிலுக்குள்ளே இருந்த பகவான் வெளியே சென்றார். வெளியே வந்தவர் ஐயங்கார் குளித்துக கொண்டிருந்த குளக்கரையில் கடும் வெயிலில் தாகமுற்ற சிறுத்தையொன்று தண்ணீர் பருக அக்குளத்திற்கு வருவதைக் கண்டார். பகவான் அச்சிறுத்தையிடம் சென்று, மெல்லிய குரலில், இப்பொழுது போய், சிறிது நேரம் கழித்து வா, உன்னைக் கண்டு அவர் அச்சமடைவார் என்று கூறினார். பரம்பொருள் இவ்வாறு கட்டடையிட்டவுடன் சற்றும் இரக்க குணமே இல்லாத சிறுத்தையும் அங்கிருந்து அமைதியாக சென்று விட்டது. பின்னர் குளத்திலிருந்து வந்து கொண்டிருந்த ஐயங்காரைப் பார்த்து, இச்சமயத்தில் இம்மாதிரியான இடத்திற்கு வரக்கூடாது. காட்டு விலங்குகள் தண்ணீர் பருக வரும் நேரமிது என்று கூறினார். ஆனால் அவரிடம் சிறுத்தை பற்றி ஒருவார்த்தைகூட கூறவில்லை.



*பச்சையம்மன் கோயில் (பழைய தோற்றம்)*

## ஜாக்கி நாய்

1905-1906ஆம் வருடங்களில் பிளேக் நோய் வந்து ஐந்தாறு மாதங்கள் தொடர்ந்து ஆட்டிவைத்த சமயத்தில், வீதியில் உள்ள வீடுகள் எல்லாம் ஆளில்லாமல் இருந்தன. மக்கள் ஊரையே காலி செய்து விட்டுச் சென்றுவிட்டார்கள். பகவானுடன் இருந்த ஜாக்கி நாய் நமச்சிவாயர் கோயில் பூசாரியுடன் தங்கிவிட்டான். ஏதோவொரு காரணத்தினால் பகவானுடன் பச்சையம்மன் கோயிலுக்குச் செல்லவில்லை. அந்த மாதங்களில் காட்டிலிருந்து வந்த சிறுத்தைகள் ஆள் நடமாட்டம் அற்ற வீதிகளில் பகலில்கூட சுதந்திரமாகத் திரிந்தன. இம்மாதிரி சுற்றித் திரிந்த சிறுத்தைகளுக்கு ஜாக்கி எளிதாக இரையாகிவிட்டான்.

## சுகாதாரப் பணியாளர்களின் பக்தி

சுமார் 6 மாதங்களுக்கு பிளேக் நோயினால் ஊரே காலி செய்யப்பட்டது. அரசின் சுகாதாரத்துறை ஊழியர்கள் சுமார் 200 நபர்கள் இரு இடங்களில் முகாமிட்டு இருந்தார்கள். 150 பேர் அடங்கிய குழு செட்டிகுளம் என்ற இடத்திற்கு அருகிலும் இது அப்போது திருவண்ணாமலை நகரின் வடக்கு எல்லையாக இருந்தது. மீதி 50 பேர் கொண்ட குழு ஊரின் மற்ற எல்லைகளிலும் முகாமிட்டிருந்தது. இந்தச் சுகாதார ஊழியர்கள் வீடு வீடாகச் சென்று மருந்து அடிப்பார்கள்.

அப்போது பகவான் இரண்டு மூன்று அன்பர்களுடன் பச்சையம்மன் கோயிலில் இருந்தார். அக்குழுவில் சிலர் பகவானைத் தரிசிக்க வருவதுண்டு.

## தொற்று நோயின் முடிவும் கொண்டாட்டமும்

அவர்கள் தங்கள் பணி முடிந்து திரும்புகையில், ஒரு பஜனை நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்ததாகவும், அதில் பகவானைக் கலந்து கொள்ள வேண்டும் என்றும் வேண்டியிருந்தனர். பகவான் அதைப் பெரிதாக எடுத்துக் கொள்ளவில்லை. அவர்கள் எங்கே இதெற்கெல்லாம் ஏற்பாடுகள் செய்யப்போகிறார்கள் என்று வாளாவிருந்தார்.

ஒருநாள் இரவு சுமார் 30 நபர்கள் கொண்ட குழு ஒன்று கையில் விளக்குடன் பச்சையம்மன் கோயிலுக்கு வந்து விட்டனர். தூங்கிக் கொண்டிருந்தவர்களை எழுப்பி நிகழ்ச்சியில் கலந்து கொண்டு பகவானை அருள்புரியுமாறு வற்புறுத்தினர். பகவானும் மறுக்க இயலாமல் அவர்களுடன் சென்றார்.

அங்கே ஏற்பாடுகள் பலமாக இருந்தன. அலங்கார விளக்குகள், தின்பண்டங்கள், மாலைகள்,

பக்க வாத்தியங்கள் என்று ஏற்பாடு வெகுவாக இருந்தன. பகவானுக்காக ஒரு மேடையும், இசைக் கலைஞர்களுக்காக ஒரு மேடையும் ஏற்பாடாகியிருந்தது. ஊரிலிருந்த முக்கிய பிரமுகர்கள் சிலரும் அங்கிருந்தனர். பகவானுக்கு மாலை அணிவித்து மரியாதை செய்தனர். அங்கே குழுமியிருந்தவர்களில் பலர் மது அருந்தியிருந்தனர். எனவே அவர்கள் மிகுந்த உற்சாகத்துடன் இருந்தனர்.

பகவான் சிறிது நேரம் அவர்களுடன் இருந்து விட்டு பின்னர் விடைபெற்று திரும்புகையில் சிலர் விளக்குடன் கோயில்வரை வந்து விட்டுச் சென்றனர்.

★★★

பெரு நாட்டில் சனாதன சமயமான மாயன் வழிபாட்டின் ப்ரதான தெய்வமான மச்சுபிச்சு மலைவழிபாட்டினை அருணாசல கிரிவலத்துடன் ஒப்பிட்டு பகவான் மேலும் விளக்கினார்: அருணாணாலம் இறைத்தன்மையின் புருஷபாகம். அது பூகோள அச்சின் தலைப்பகுதி. அதற்கு நேர்கீழே அதே அக்ஷ தீர்க்க ரேகைப் பகுதியை மேஜர் சாட்விக் ஆய்ந்தபோது அது மச்சு பிச்சு குன்றில் முடிவதைக் கண்டார்.

அருணாசலம் சிவன் உருவாயின் அதன் counterpart சக்தி வடிவம். அண்ணாமலையின் ஆஸ்தானதேவி 'பச்சையம்மன்' என்று அழைக்கப்படுகிறாள்.

அதையொத்து மச்சு பிச்சு மலையின் அதிதேவதையும் 'பாச்மான்' என்றே மாயன் மொழியில் அழைக்கப்படுகிறாள்.

# ரமணாயனம்

## க்ரேஸி மோஹன்

### முக்தி காண்டம் (தொடர்ச்சி)

*நானுர்வு நிஷ்டையில் நிற்க சவிகல்பம்*
*நானொடுங்க நீடித்தால் நிர்விகல்பம் வானுயர்ந்து*
*வாயு பலூன் வெடித்துள்ளே வான்புக*
*சாயும் நிலைசகஜம் சேர்....(360)*

ஆழ்ந்த நிஷ்டையில் மூழ்கும்போது வேறுபாடுகளுடன் கூடிய 'நான்' தற்காலிகமாக ஆன்மாவில் ஒடுங்குகின்றது. அதுவே இடைவிடாத பயிற்சியினால் நீடிக்கும்பொழுது இந்த ஸவிகல்ப சமாதி, தானே தானாய்த் தனித்து ஒடுங்கும் நிர்விகல்ப ஸமாதியாக ஆகிறது. ஆத்ம சாட்சாத்காரத்தின் இறுதிநிலை தான் தானாகவே எப்பொழுதும் இருந்துகொண்டு உலகில் வாழும்பொழுது சாட்சி பாவத்துடன் உலவுவதாம். இதற்கு காற்று நிரம்பிய பலுன் வெடிக்கும்பொழுது உள்ளே இருந்த காற்று வெளியே சூழ்ந்த வாயு மண்டலத்தில் வேறுபாடின்றி ஒடுங்குவதை உதாரணமாக கவிஞர் காட்டுகிறார்.

*இயல்பாக தன்னில் இருத்தலிங்கு முக்தி*
*கயல்போல நீரில் கலந்து செயலும்*
*உடலில் உறுத்தும் உபாதிகள் எல்லாம்*
*கடலில் அலையாகக் காண்....(361)*

முக்தி என்பது தன்னில் தானே இயல்பாக இருத்தலாம். இதையே பகவான் 'நாமதுவாய் உள்ளநிலை' என்று குறிப்பிடுகிறார். தன்முயற்சி எதுவுமின்றி இயல்பாக மீன் நீரில் நீந்துதல்போல் எந்தச் செயலிலும் தன்முனைப்பு இன்றி சஹஜநிலையில் வாழ்வதே பூரண முக்திநிலை. ஜீவனைக் கட்டுப்படுத்தும் உபாதிகள் அனைத்தும் அலைகள் கடலில் ஒடுங்குவதுபோல் ஆத்மாவில் ஒடுங்குகின்றன.

*புற்றில் தவமாய் புராணத்தோன் வான்மீகி*
*புற்றே தவமாய் பகவானைப் பற்றியது*
*சார்கோமா தன்னை சுயம்புலிங்கம் என்பாராம்*
*யார்கைக்கோ வந்தாற்போல் பார்த்து....(362)*

வால்மீகி முனிவரின் வாழ்க்கையில், அவர் ஆழ்ந்த தவத்தில் இருக்கும்பொழுது புற்று வந்து மூடியது குறிப்பிடப் படுகின்றது. தானே பகவானை அடைய தவமிருந்து வந்ததுபோல் சார்கோமா என்னும் புற்றுநோய் பகவான் கரத்தை வந்து பற்றியது. காரணமே இன்றி தன்னைப் பற்றிய அதனை 'ஸ்வயம்பு லிங்கம்' என்று பகவான் குறிப்பிடுகின்றார். அது மட்டுமல்ல, வேறு யாருக்கோ வந்ததைப் போன்று அதனையும் வேடிக்கை பார்த்தார் பகவான்.

*ரமணனே சத்குரு ராயனென்று பாடும்*
*அமளியில் சேர்ந்தநம் அய்யன் சுமுகமாய்*
*''ஏனென்னை இச்சிறிய மேனிக்குள் பார்க்கின்றீர்*
*நானும்தான் நம்மெல்லோர் நான்....(363)*

'ரமண ஸத்குரு ராயனே' என்று பக்தர்கள் பாடும்போது தானும் சேர்ந்து பாடினார் பகவான். இது என்ன வினோதம்! என்று அடியார் பார்த்தபோது, "ரமணனை ஏன் இந்தச் சிறிய உருவத்தில் அடைக்கப் பார்க்கிறீர்கள்?" ரமணன் என்பது அகண்டாகார ஸ்வரூபம்" என்றார்.

*அண்ணலை விட்டு அமெரிக்கா செல்கின்ற*
*எண்ணத்தால்பெண் பக்தை எலினார் கன்னத்தில்*
*தங்கும்கண் ணீரை துடைத்துத் தகப்பன்நான்*
*எங்குநீ சென்றாலும் அங்கு....(364)*

*பகவானை விட்டுப் பிரிந்து அமெரிக்கா செல்லவேண்டித் துக்கத்தால் கண்ணீர் விடும் திருமதி. எலினாரிடம், "நீ எங்குச் சென்றாலும் உன் தந்தையாக நான் அங்கு இருப்பேன்" என்ற அமுதமொழி கூறினார்.*

*அன்பெனும் கட்டில் அகப்படும் பர்வதம்*
*நண்பனாய் அன்பனாய் ஞானியாய் வன்பகையால்*
*கூடார் தமக்கும் குளிரடி வாரத்தில்*
*கூடார மாகும் குரு....(365)*

*பகவான் அன்பெனும் பிடியில் அகப்படும் மலை. அன்பனாய், நண்பனாய், ஞானியாய் பன்முகம் காட்டும் அவர் தன்னிடம் பகையைக் காட்டுபவரையும் தமது அன்பு இதயத்தில் அமர்த்தி அருள் என்னும் குளிர்த் தென்றல் தரும் பரமகுரு ஆவார்.*

*ஆசுபர்ன் ஆர்தரின் பாசமிகு பெண்கிட்டி*
*தேசம் திரும்பிடத் தேம்பினாள் பாசமாய்*
*என்னை மறவாதே என்றும் நினைவில்கொள்*
*உன்னைநான் கொள்வேன் உளம்....(366)*

*ஆர்தர் ஆஸ்போர்னின் மகள் கிட்டி மட்டும் தாய்நாடு திரும்பும் தருணம் வந்தபோது, பகவானை விட்டுச் செல்லமாட்டேன் என்று அழுதாள். பகவான் அவளிடம், "நீ இங்கிலாந்து சென்றாலும் என்னை மறவாது நினைவில் கொள். நானும் உன்னை எந்நாளும் இதயத்தில் வைத்திருப்பேன்" என்று உறுதி கூறினார்.*

*எண்ணா(து) இருந்திடல் எவ்வளவு கஷ்டமோ*
*எண்ணலவர்(கு) அவ்வளவு ஏதமாம் அண்ணளுலம்*

*தாம்புக் கயிறென்ற தோற்றப் பிழையாமே*
*சாம்பல் அதற்கில்லை சத்து....(367)*

*சாமான்யனுக்கு எண்ணம் எதுவும் எழாது இருத்தல் எவ்வளவு கடினமோ, அவ்வளவு கடினம் ஞானியர்க்கு எண்ணம் எதுவும் தோன்றுவது. கயிற்றினை பாம்பு என்று குறைந்த வெளிச்சத்தில் மயங்குவதுபோன்ற அஞ்ஞானம் உலகு-உடம்பினை 'நான்' என்று எண்ணுவது. அது உண்மையில் 'சத்' அல்லாத சாம்பலே.*

*பற்றிலாத பற்றும் பழகப் பெருநெருப்பாய்*
*பற்றிடும் ஆகவே முற்றுவை வெற்றிலை*
*சாப்பிட்டுப் போடுவதை சாக்கிட்டு விட்டாராம்*
*கூப்பிட்ட ஆள்வராக் கண்டு....(368)*

*பகவானுக்கு உணவுக்குப்பின் வெற்றிலையை அடியவர் (ஜீரணத்துக்காக) தருவது வழக்கம். அதிலே சற்றும் பற்று இல்லாத பகவான் பற்றே இல்லாமல் ஒரு செயலைச் செய்துகொண்டே வந்தாலும், நாளாவட்டத்தில் அதில் பற்று உண்டாகலாம் என்று அறிந்து, இதை எப்படி மறுப்பு சொல்வது என்று காத்திருந்தார். ஒருநாள் வெற்றிலை கொணரும் ஆள் சமயத்தில் வராததையே சாக்காகக் கொண்டு, வெற்றிலை போடும் பழக்கத்தையே விட்டுவிட்டார்.*

*பேஷ்கூறி பண்டிதர் சாஷ்டாங் கமாய்க்கேட்டார்*
*காஷ்மீரி யாரிடம் கற்றதென்று ஹாஸ்யமாய்*
*"ஆசையாய் கேட்டவும் ஆசாமி கேள்விக்கு*
*பேசாமல் சொன்னேன் பதில்"....(369)*

*காஷ்மீர தேசத்து அறிஞருடன் வந்த காஷ்மீர மொழி தவிர வேறு எதுவும் தெரியாத காவலாளி பகவான் எதிரிலேயே நீண்டநேரம் நின்றிருந்தான். பின்னர் அவனது எஜமானிடம் என்னுடைய கேள்விகட்கு*

எல்லாம் பகவானிடம் இருந்து தெளிவான விடை கிடைத்தது என்றான். வியப்புற்ற பண்டிதர், 'அவனது தாய்மொழியை நீங்கள் யாரிடம் கற்றீர்?' என்று கேட்டபோது, "அவன் ஆத்ம தாகத்துடன் எழுப்பிய கேள்விகட்கு நான் என் மௌனத்தாலேயே விளக்கம் தந்தேன்" எனக் கூறினார்.

*சன்யாஸி ஆகலாம் சம்சாரி வீட்டுக்குள்*
*தன்யோ சனையால் தடம்புரண்டு சன்யாஸி*
*காட்டில் க்ரகஸ்த்தனாய் மாட்டித் தவிக்கலாம்*
*ஆட்டுக்கு வாலிங்(கு) அளந்து....(370)*

இல்லறத்தைத் துறந்து சன்யாஸியாய் போனால்தான் முக்தி கிடைக்கும் என்பதில்லை என்று பகவான் கூறுதல். வீட்டிற்குள் வசிக்கும்போதே பற்றற்று வாழ்ந்தால் சம்சாரி ஒருவனும் சன்யாஸிபோல் வாழலாம். காட்டிற்கு துறவறம் பூண்டு சென்ற துறவி ஒருவனும், இல்வாழ்வு பற்றியே எண்ணிக்கொண்டு, கிரஹஸ்தன் போல் ஆசையிலும் கற்பனையிலும் சிக்கித் தவிக்கலாம். அவனது பக்குவத்துக்குத் தக்கபடியே அனைத்தும் அமையும். ஆட்டுக்கு வாலை அளந்துதான் வைக்கிறான் இறைவன்.

# இனிவரும் திருநாட்கள்

## 2020

| | | | |
|---|---|---|---|
| மே | 16 | சனி | மஹாபூஜை |
| ஜுலை | 2 | வியாழன் | பசு லட்சுமி ஆராதனை |
| | 5 | ஞாயிறு | குரு பூர்ணிமா |
| செப்டம்பர் | 1 | செவ்வாய் | பகவான் அருணையடைந்த தினம் |
| அக்டோபர் | 17 | சனி | நவராத்திரி விழா தொடக்கம் |
| | 25 | ஞாயிறு | சரஸ்வதிபூஜை |
| | 26 | திங்கள் | விஜயதசமி |

# பெருங்கருணைப் பேராறு

## (எனது பள்ளி நாட்களில் பகவானுடன் இருந்த அனுபவங்கள்)

### *Dr. K. சுப்ரஹ்மணியன்*

*பகவானுடன் நான் பெற்ற இளவயது அனுபவங்களைப் பற்றிக் கூற எனக்குத் தயக்கமாகத்தான் இருந்தது. எனினும், அதனைக் கடந்துவந்து எனது அனுபவங்களைத் தொடர்கின்றேன். எந்தவிதமான பாசாங்கும் இல்லாமல் நான் நேரடியாகக் கூறுகிறேன்:*

பகவான் எனும், பெரு அருள் நிதியத்தைக் கண்டு அவர் சந்நிதியில் அமரும் தகுதி எனக்கு இல்லை. பகவான் சிவபிரானே ஆவார். எனது பூர்வ ஜன்மப் புண்யத்தினாலே அவரைக் காணும் பேறு எனக்குக் கிட்டியது. எனது பள்ளி நாட்களில் இருந்தே நான் நேரம் கிடைக்கும்போதெல்லாம் ரமணாஸ்ரமம் வழக்கமாகக் கொண்டு இருந்தேன். எனது தந்தை கொடைக்கானலில் ஓர் ஆங்கிலப் பள்ளியில் ஆசிரியராக இருந்தார். அந்த ஊரில் எட்டாவது வகுப்புக்கு மேல் பயில வசதி இல்லை. எனவே நான் வேறு ஓர் ஊர் போய்

*[Dr. K. சுப்ரஹ்மண்யனின் ஹைதராபாத் ரமண கேந்திர சொற்பொழிவின் ஒருபகுதி. நமது நாட்டில் பகவான் உபதேசங்களைப் பரப்பும் ரமண கேந்திரங்கள் மற்றும் ஏனைய அமைப்புகளை ஸ்தாபித்ததில் பெரும்பங்கு ஆற்றியவர். பகவானின் உபதேசங்களையும் தெள்ளத்தெளிவாக சொற்பொழிவுகள் மற்றும் நூல்கள் மூலம் விளக்கியவர்.*

*இதை வெளியிட அனுமதித்த ஹைதராபாத் ரமண கேந்திரத்திற்கு நமது நன்றி - ராம் மோஹன்.]*

*கல்வி பயில நேர்ந்தது. நான் ஹாஸ்டலில் தங்கிப் படித்துக்கொண்டு இருந்தேன். எனவே, சமயம் கிடைக்கும்போதெல்லாம் ரமணாஸ்ரமம் செல்லும் சுதந்திரம் இருந்தது. சிறிதளவு பணம் என்னிடம் சேர்ந்தவுடனே, ரமணாஸ்ரமம் போய் இருந்து, சில நாட்கள் ஆனவுடன் திரும்பி வந்து விடுவேன்.*

*திருவண்ணாமலை செல்ல டிரெயினில் செல்வதையே வழக்கமாகக் கொண்டு இருந்தேன். திருவண்ணாமலை இரயில் நிலையத்தில் இருந்து ஆஸ்ரமத்திற்கு நடந்து செல்வேன். பல சமயங்களில் விழுப்புரம் சென்று அங்கிருந்து அதிகாலை 4 மணி டிரயெினில் ஏறி, திருவண்ணாமலையை 6 மணிக்கு அடைந்து விடுவேன். பகவானும் தனது அருணை விஜயத்தின்போது இதே 4 மணி டிரெயினில்தான் பயணித்து, 5 மணி அளவில் திருக்கோயிலூரை அடைந்து, அங்கிருந்து நடந்தே அறையணிநல்லூருக்குச் சென்றார். அப்போதெல்லாம் நான் அந்தப் பதினேழு வயதுச் சிறுவன் முதன்முதலில் அருணாசல தர்சனம் பெற்றபோது அவன் உள்ளத்தில் எத்தகைய உணர்வுகள் பொங்கி எழுந்திருக்கும் என எண்ணுவேன். எத்தகைய உண்மை நிலையில் அவர் உள்ளம் உயர்ந்திருக்கும்! மாம்பழப்பட்டிலிருந்து அறையறிநல்லூர் நடந்தே வந்த அவர் அங்கிருந்து திருக்கோவிலூர் வந்து, அங்கு இரவை ரயில்வே ஸ்டேஷனில் கழித்தார். காலை ஐந்து மணி டிரெயினில் ஏறி, 6 மணிக்கு திருவண்ணாமலையை அடைந்தார்.*

*நாம் டிரெயினிலோ அல்லது பஸ்ஸிலோ திருவண்ணாமலையை நெருங்கும்போதே அருணாசல கிரியைக் காண முடியும்! முதன்முறையாக அண்ணாமலையைக் காணும்போது, நம்மால் விவரிக்கவியலாத பேரானந்தம் நம் உள்ளத்தில் முகிழ்க்கிறது. திருவண்ணாமலையை அடையுமுன்னரே*


*நமது உள்ளத்தை பகவானின் திருவுருவம் முழுமையாக ஆட்கொள்கிறது. நாம் பகவானின் சந்நிதியிலேயே இருப்பதாக எண்ணத் தொடங்குகிறோம். நம் நெஞ்சம் பகவானைப் பற்றிய எண்ணத்தில் கரைகின்றது. டிரெயினில் இருந்தே நாம் ஸ்கந்தாஸ்ரமத்தைக் காண்கிறோம். அதைப் பார்க்கும்போது அதனுடன் பகவான் கொண்ட தொடர்பும் அவர் அங்கே நிகழ்த்திய செயல்களும் நம் உள்ளத்தில் விரிகின்றன. ஒரு ஐரோப்பிய பக்தை இவ்வாறு எழுதுகிறார்:*

*"நான் உலகில் பல்வேறு இடங்களுக்கும் சென்று உள்ளேன். ஆயினும் அருணாசலத்தைப்போல் உள்ளத்தை ஈர்க்கும் மலையைக் கண்டதே இல்லை. அதைப் பார்க்கும்போது வாழ்விலே இதுவரை அனுபவித்திராத பேரமைதி என் நெஞ்சத்தை நிறைக்கிறது. நான் அதைப் பார்க்கப்பார்க்க, மேலும்மேலும் அது என்னை ஈர்க்கிறது. பகவான் கூறுகிறார்: "இது காந்த சக்தி வாய்ந்த கிரி. நீங்கள் ஒருதரம் அதனால் ஈர்க்கப்பட்டால் போதும், மீண்டும் மீண்டும் அது உங்களை ஈர்க்கத் தொடங்கும். உங்fகள் மனது இந்த மலைபோன்று அசையான நிலை பெறும்வரை இது நிகழும். மனத்தை முழுவதுமாய் சாந்தமாக்கும் மாபெரும் சக்தி வாய்ந்தது அருணகிரி. காசியில் இறந்தால் முக்தி கிடைக்கும் என்று கூறுவர். அருணாசலத்தையோ ஆழ்ந்து சிந்தித்தால் போதும், 'ஸ்மரணாத் அருணாசலா'. நம் அஹங்காரம் அந்தத் தருணத்தில் அழிந்துவிடும். பகவானது அருள்பெறின் நமது அஹங்காரம் முற்றிலுமாக நாசம் அடையும்.*

*நான் ஆஸ்ரமத்தில் நுழைந்தவுடன் நான் எனது கை, கால், முகத்தினைத் தூய்மைப் படுத்திக் கொள்வேன். நான் ஆஸ்ரமத்திற்குள் நுழைகிறேன் என்ற உணர்வே என் உள்ளத்தில் பேரின்ப அலைகளை உண்டாக்கும்.*

நான் அப்போது மிக இளையவன். வெளி உலகத்துடன் எனது தொடர்பு மிகக் குறைந்த அளவிலேயே இருந்தது. பல நாட்கள்வரை எனக்கு யாருடனும் பேசவே விருப்பம் இல்லாமல் இருந்தது. உரையாடல் தேவையான ஒன்று என்ற எண்ணமே எனக்குத் தோன்றவேயில்லை.

பகவான் முன்னிலையில் மௌனமாக அமர்ந்திருந்தாலே போதும் என நான் எண்ணினேன். ஒருமுறைகூட அவரிடம் ஏதேனும் கேள்வி கேட்கவேண்டும் என்று எனக்குச் சிறிதும் தோன்றவில்லை. “அவருக்குத் தெரியாதது என்ன இருக்கிறது?” என்றுதான் எனக்குத் தோன்றியது.



ஒவ்வொரு முறை நான் ஆஸ்ரமத்திற்குள் நுழையும்போதும் விவரிக்க இயலாத ஒரு அற்புதமான சாந்தம் என்னைச் சூழ்ந்திருந்தது. எனக்கு மட்டுமல்ல, உங்களுக்கும் அதே உணர்வுதான் ஏற்பட்டு இருக்கும் என்பதை நான் நிச்சயமாக அறிவேன்.

நான் உள்ளே நுழையும்போதெல்லாம், பண்டக சாலையில் இருந்து பகவான் படிகளில் இறங்கி வருவதைக் காண்பேன். நான் அங்கேயே, நின்றுகொண்டு அவர் பழைய தியான ஹாலில் உட்செல்லும்வரை அவரையே பார்த்துக்கொண்டு இருப்பேன். நான் ஆஸ்ரமத்தில் சந்திப்பதற்குள் "நீங்கள் இன்னின்னாரைச் சந்தித்துப் பேசி இருக்கிறீர்களா?" என்று கேட்பார்கள். நான் அவர்கட்கு, "நீங்கள் குறிப்பிடுவோர்களை எல்லாம் நான் பார்த்து இருக்கிறேன். ஆனால் பேசியதில்லை" என்று விடையிறுப்பேன். நான் பகவான் முன்னிலையில் மௌனமாக அமர்ந்து இருப்பேன். அவர் எழுந்து வெளியே செல்லும்போது அவருடனேயே சிறிது தூரம் நடந்து சென்று, அவரையே நோக்கிக்கொண்டு இருப்பேன். நான் செய்ததெல்லாம் இதுதான். நான் ஆஸ்ரமத்தை விட்டு நீங்கும்போது, பகவானை அடைந்து வணங்கி நான் திரும்பிச் செல்கிறேன் என்று கூறுவேன். பகவான் அதற்குத் தலையசைத்து, தன் சம்மதத்தைக் காட்டுவார். நான் மட்டும் இவ்வாறு ஆஸ்ரமத்திற்கு அடிக்கடி தனியாகச் சென்று வருவதற்கு எனது பெற்றோர் எத்தகு ஆட்சேபணையும் தெரிவிக்கவில்லை. எனது தந்தையின் நண்பரான ஒரு முதியவர், இப்படி அடிக்கடி ஆஸ்ரமத்திற்கு நான் செல்லக்கூடாது என்றும், அப்படிச் செல்வது எனது உலகாயத வாழ்வைப் பெரிதும் பாதித்து, நான் பயனற்றவன் ஆகிவிடுவேன் என்றும் கூறினார். இதை என்னிடம் தெரிவித்த என் தந்தை, "நீ ஆஸ்ரமம் சென்று வருவது நமக்கு நன்மையே பயக்கும். இதனால் நீ

பயனற்றவன் ஆகிவிடுவாய் என்பது தவறான கருத்து. நீ தாராளமாகப் போய் வரலாம்" என்று கூறிவிட்டார்.

இத்தருணத்தில் சங்கரரின் 'விவேக சூடாமணி' எனக்குள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இந்நூலில் கூறப்பட்டுள்ள தத்துவக் கருத்துக்களைப் பயில்வதும், பகவானின் அருட்கொடையின் கீழ் வந்துற்றதும், என்னுள் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தியது. எனது உடலைக் குறித்து கருத்துச் செலுத்துவதை நான் முற்றிலும் புறக்கணிக்க ஆரம்பித்தேன். வாழ்க்கையின் பல அம்சங்களைக் குறித்து நான் கருத்தைச் செலுத்தக் கூடாது என்று எண்ண ஆரம்பித்தேன். நான் எப்படி உடை உடுத்திக் கொள்கிறேன். எங்ஙனம் உணவு உண்கிறேன் என்பதை எல்லாம் முற்றிலும் புறந்தள்ள ஆரம்பித்தேன். நான் பதினேழு வயதில் சென்னை கிருஸ்துவக் கல்லூரியில் மாணவனாகச் சேர்ந்து அங்கே ஹாஸ்டலில் தங்கி இருந்தேன். அந்த விடுதி உணவு மிகச் சிறப்பாக இருந்தது. அத்தகைய சுவையான உணவு இருந்தும் நான் காலைச் சிற்றுண்டி மற்றும் மதிய உணவு மட்டும் உண்டுவிட்டு, இரவு உணவை அறவே தவிர்த்தேன். யாரேனும் மிகவும் வற்புறுத்தினால் ஒரே ஒரு குவளை மோர் மட்டும் குடிப்பேன். என்னுடைய தபஸ்வி போன்ற பழக்கத்தைக் கண்டு எனது நண்பர்கள் கேலி செய்தனர். அவர்களுள் ஒருசிலர் எனது உடல் நலம் மிகவும் பலவீனம் அடைந்துவிடும் என்று எண்ணி வருந்தினர். இன்னும் சிலர் நான் மனநிலை பிறழ்ந்தவன் என எண்ண ஆரம்பித்தனர். ஒருமாத அளவில் என் பழக்கத்தைப் பார்த்துக்கொண்டு இருந்த தலைமைச் சமையற்காரர் என்னிடம் வந்து, 'ஏன் இப்படி உன்னைப் பட்டினி போட்டுக்கொண்டு இருக்கிறாய்? இந்த வயதில்தான் நீ நன்றாகச் சாப்பிட வேண்டும்' என்றார். இங்கேதான் பகவானின் பேரருள் வெளிப்படுகிறது. நாம் கற்பனை செய்ய இயலாத வழிகளில் அவர் நம்மைப் புரக்கிறார். இவ்வளவு பெரிய ஹாஸ்டலில்

ஒரே ஒரு மாணவன் உணவு உண்ணாவிட்டால் யார் கவலைப்படப் போகிறார்கள்? ஆனால் பகவானோ, அந்தச் சமையற்காரர் வாயிலாகவே தமது பெரிய கருணையை வெளிப்படுத்தினார். 'மற்றவர்கள் உண்ணும் உணவைச் சாப்பிட உனக்குப் பிடிக்காவிடில், நான் பிரத்தியேகமாக உனக்கு உணவு தயாரித்துத் தருகிறேன். நீ பட்டினி கிடக்க வேண்டாம்'. அவர் என் அறைக்கு வந்து உணவு எடுத்துக் கொள்ளும்படி வற்புறுத்தினார். இறுதியில் அதற்கு இணங்கி நான் இரவும் ரொட்டியும் பாலும் உண்ண ஆரம்பித்தேன்.

இப்படித்தான் பகவானின் அருள் செயல்படுகிறது. பகவான் நீ இப்படி செயல்படக்கூடாது என்று எண்ணினால், வேறு யாரோ ஒருவர் மூலம் அவர் செயல்பட்டு, உனக்கு எது தேவை என்று எண்ணுகிறாரோ அதை அடையச் செய்து விடுவார்.

இருபத்தைந்து ஆண்டுகள் கழிந்த பின்னர், என் நண்பர் ஒருவர் வீட்டில் என்னை உணவருந்த அழைத்திருந்தனர். அங்கே உணவைத் தயாரித்துப் பரிமாற வந்தவர் இருபத்தைந்து ஆண்டுகட்குமுன், ஹாஸ்டலில் என்னை வற்புறுத்தி இரவு உணவு உண்ணச் செய்த அதே சமையற்காரர். அவரைக் கண்டு நான் மிகவும் வியப்பு அடைந்தேன். என் நெஞ்சத்தில் ஒரு புதிய சுருதி ஒலித்தது. அவரும் என்னை அடையாளம் கண்டுகொண்டு இருபத்தைந்து ஆண்டுகட்குமுன் என்னை வற்புறுத்தி உண்ணச் செய்த நிகழ்வுகளைக் கூறினார். அவர் அப்போது எனக்கு உதவியதற்காக எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொண்டேன்.

நீ எதையோ சரி என்று எண்ணி அதைச் செய்ய முற்படலாம். ஆனால் நடப்பது என்னவோ, பகவான் நீ எது செய்ய வேண்டுமென்று நிச்சயிப்பதுதான்!

அந்த நாட்களில் நான் பகவான் முன்னிலையில் அமர்ந்து 'விவேக சூடாமணி' குறித்து சிந்திப்பதை வழக்கமாகக் கொண்டு இருந்தேன். இந்த வழக்கம் பல நாட்களாகத் தொடர்ந்தது. அதேபோல், மிகச் சில சொற்களையே பேசுவது என்ற வழக்கமும் தொடர்ந்தது. என்னைக் கண்ணுற்ற பலர் இந்த இளைஞனுக்கு ஏதோ கோளாறு இருக்கிறது என்றும் நான் எந்த வேலைக்கும் போய் உருப்பட மாட்டேன் என்றும் எண்ணினர். உண்மையிலேயே நான் அந்த காலகட்டத்தில் எனது முதுகலைபட்டத்தை முடித்தபின்னர் கிராமத்தில் போய் தங்கி விடுவது என்றுதான் முடிவு செய்து இருந்தேன்.

1950-ஆம் ஆண்டு அளவில், பகவான் மிகவும் நோயுற்று இருந்தார். எனவே நான் பலமுறை ஆஸ்ரமம் செல்ல ஆரம்பித்தேன். பகவானின் உடல்நிலை குறித்துச் செய்தித்தாள்களிலும் குறிப்புகள் வந்து கொண்டிருந்தன. கவலை தரும் செய்தி ஏதேனும் வரின், நான் உடனே ஆஸ்ரமம் சென்று விடுவேன். அங்கே இரண்டொரு நாள் தங்கி மீண்டும் திரும்பி வருவேன். ஜனவரி 5ஆம் தேதி, 1950ஆம் வருடம் ஜயந்தி தினத்தற்கு பகவான் நிர்வாண அறையின் வராந்தாவில் அமர்ந்து இருந்தார். அவரால் நடக்க முடியாததால் அங்கிருந்தே எல்லோருக்கும் தரிசனம் வழங்கினார். நிர்வாண அறையை ஒட்டி ஒரு குளியல் அறையும் இருந்தது. பகவானால் மிகுந்த சிரமத்துடன்தான் நடக்க முடிந்தது. அவர் கையில் முளைத்து இருந்த புற்றுக்கட்டியில் இருந்து குருதி பெருக்கெடுத்து ஓடும். அதைக்கண்ட அன்பர்கள் மனம் பதறி அழத் தொடங்குவர். அவர்கள் அனைவரையும் பகவான் மிகுந்த கருணையுடன் நோக்கி, "ஏன் இங்ஙனம் கவலையுறுகின்றீர்கள்? எல்லாமே சீக்கிரம் சரியாக விடும்" என்று கூறுவார்.

ஜயந்தி நாளன்று அருணாசலேஸ்வரர் ஆலயத்தின் யானை வந்து, பகவானிடம் அழைத்துச் செல்லப்பட்டது. அது வந்தவுடனே யாரும் எதுவும் கூறாமலேயே பகவானின் முன் நின்று அவரை வணங்கியது. காண்பவர் அனைவரது உள்ளத்திலும் இக்காட்சி மகிழ்வை உண்டாக்கியது. காண்பவர் சிலர் உணர்ச்சிவசப்பட்டு, "ஆனந்த்! ஆனந்த்!" என்று உரத்துக் கூறத் தொடங்கினார். பகவான், அவர்களை நோக்கி அழகிய புன்முறுவல் செய்தார். சற்றுநேரம் அங்கேயே இருந்த யானை பின் திரும்பிச் சென்றது.

பகவானால் உறுதியாக நடக்க முடியாததால், சர்வாதிகாரி அணுக்கத் தொண்டர்களிடம் பகவான் நடக்கும்போதெல்லாம் அவர் பின்னொட்டிச் சென்று அவர் விழுந்துவிடாமல் ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளும்படி கூறியிருந்தார். பகவானோ தன்னை யாரும் தொட்டுத் தூக்க அனுமதிக்கவில்லை. அவர் கட்டிலில் எழுந்து இருக்கும்போது மட்டும் யாரேனும் தன்னைப் பிடித்துக்கொள்ள அவர் அனுமதித்தார். ஒருநாள் அவர் கட்டிலில் இருந்து எழுந்திருக்கும்போது, அணுக்கத் தொண்டர் அவரைப் பிடித்துக்கொள்ள மறந்துவிட்டார். பகவான் கட்டிலில் இருந்து எழுந்தவுடன் பிடிமானத்திற்கு அருகில் எவரும் இல்லாததால் விழுந்துவிட்டார். மற்றொரு தொண்டர் வந்து, பகவானை கைதாங்கி எழுப்பினார். அந்தச் சமயத்தில் வேறு எவரேனும் பகவானின் ஸ்தானத்தில் இருந்தால், தன்னைத் தாங்கிப் பிடிக்காத தொண்டரைத் திட்டி இருப்பர். அலட்சியமாக இருந்த தொண்டரின் உடல் அச்சத்தில் உதறத் துவங்கியது. பகவானோ இந்தத் தவற்றைச் சற்றும் பொருட்படுத்தாமல் தன்னைத் தாங்கிப் பிடித்த மற்றொரு அணுக்கத் தொண்டரிடம் கூறினார்: "சர்வாதிகாரியிடம் நான் விழுந்த இந்தச் சம்பவத்தைச் சொல்லாதே. அவரிடம் நீ சொல்லிவிட்டால் இவனை உண்டு இல்லை என்று

ஆக்கிவிடுவார். எனவே இங்கே நிகழ்ந்ததைப் பற்றி மூச்சே விடாதே!"

எத்தகு உயரிய கருணை உள்ளம்! நம்மால் விவரிக்கவே இயலாத உயர்நிலையில் இருப்பவர் பகவான். கீழே விழுந்தவர் வேறு ஒருவராக இருப்பின் தன்னைப் பற்றி நினைப்பாரே அன்றி, தொண்டருக்கு ஏற்பட இருக்கும் சிக்கலைக் குறித்து எண்ணியே இருக்க மாட்டார். பகவானோ இருபத்து நான்கு மணி நேரம் பரமாத்மாவே. அவருடைய அருட்கதிர்கள் நம்மையுமே பெருந் தன்மையுடனும், கொடைத் தன்மையுடனும் இருக்கச் செய்கிறது. ஆனால் இந்த உயர்நிலை சிலநேரம் மட்டுமே நீடிக்கிறது. பகவானோ எல்லா நேரத்திலும் உயர்பண்புகளின் உறைவிடம். அவர் சந்நிதியில் நாம் அமர்ந்து இருக்கும்போது, நம்மால் எடுத்துக்கூற இயலாத வழியில் அவரது பேரருள் நம்முள் பரிணமிக்கிறது. பகவான் மற்றும் அவரை ஒத்த மஹான்களிடம் உள்ள மிக உயர்ந்த குணம் இது. அவர்கள் எப்போதுமே நாங்கள் உனக்காக இதைச் செய்தோம் என்று கூறமாட்டார்கள்.

கடவுள் மற்றும் குரு செய்யும் அற்புதச் செயல்களை நம்மால் புரிந்துகொள்ள இயலாது. அது மட்டுமல்ல, இச்செயலை நாம் நமது சுயமுயற்சியால்தான் இந்தச் சீரிய செயலைச் செய்தோம் என்று எண்ணும் சுதந்திரத்தையும் நமக்கு வழங்கி உள்ளார்கள். நாம் பல்வேறு பிணைப்புகளால் கட்டப்பட்டுள்ளோம். அந்தபோல் ஏனையோரையும் கட்ட நினைக்கிறோம். முக்தி என்பது அஹங்காரத்தில் ஆட்சியிலிருந்து விடுபடுவதையே குறிக்கிறது. இந்த விடுபடல் எக்காலமும் பிணைப்பு எதுவும் இல்லாமல் ஸர்வ சுதந்திரராய் இருக்கும் ஸத்குருவின் கருணையால் மட்டுமே கிடைக்கும்.

# உத்தவ கீதை: சில கேள்விகளும் பதில்களும்

பகவான் கிருஷ்ணனின் குழந்தைப் பருவம் முதலே, அவருக்குப் பணிவிடைகள் செய்து, தேரோட்டி, பல்வேறு சேவைகள் புரிந்தவர், உத்தவர். இவர் தனது வாழ்நாளில், தனக்கென நன்மைகளோ வரங்களோ கண்ணனிடம் கேட்டதில்லை.

துவாபரயுகத்தில், தமது அவதாரப் பணியை முடித்துவிட்ட நிலையில், உத்தவரிடம் ஸ்ரீகிருஷ்ணர், "உத்தவரே, இந்த அவதாரத்தில் பலர் என்னிடம் பல வரங்களும், நன்மைகளும் பெற்றிருக்கின்றனர். ஆனால், நீங்கள் எதுவுமே கேட்டதில்லை. ஏதாவது கேளுங்கள், தருகிறேன். உங்களுக்கும் ஏதாவது நன்மைகள் செய்துவிட்டே, எனது அவதாரப் பணியை முடிக்க நினைக்கிறேன்" என்றார்.

இந்த உரையாடலில் உத்தவர் கேட்ட கேள்விகளும் அதற்கு யசோதை மைந்தனின் பதில்களும் உத்தவ கீதை எனப்படுகிறது.

மகாபாரதத்தில் ஏற்படும் சில அடிப்படை சந்தேகங்களை இது தீர்த்து வைக்கிறது என்பது இதன் சிறப்பு.

பெருமானே! நீ வாழச் சொன்ன வழிவேறு; நீ வாழ்ந்து காட்டிய வழி வேறு! நீ நடத்திய மகாபாரத நாடகத்தில்... நீ ஏற்ற பாத்திரத்தில், நீ புரிந்த

செயல்களில், எனக்குப் புரியாத விஷயங்கள் பல உண்டு. அவற்றுக்கெல்லாம் காரணங்களை அறிய ஆவலாக இருக்கிறேன் நிறைவேற்றுவாயா? என்றார் உத்தவர்.

உத்தவரே! அன்று குருக்ஷத்திரப் போரில் அர்ஜுனனுக்காக நான் சொன்னது, பகவத் கீதை. இன்று உங்களுக்குத் தரும் பதில்கள், உத்தவ கீதை.

அதற்காகவே உங்களுக்கு இந்தச் சந்தர்ப்பத்தைத் தந்தேன். தயங்காமல் கேளுங்கள் என்றான் பரந்தாமன்

உத்தவர் கேட்க ஆரம்பித்தார்; கண்ணா! முதலில் எனக்கு ஒரு விளக்கம் வேண்டும். உண்மையான நண்பன் யார்?

நண்பனுக்கு ஏற்படும் துயரத்தைத் தீர்க்க, உடனே அழைப்பு இல்லாமலேயே வந்து உதவி செய்பவனே உற்ற நண்பன் என்றான் கண்ணன்.

இந்தப் பதிலை எதிர்பார்த்துத்தான் உத்தவர் இந்தக் கேள்வியை முன் வைக்கிறார்.

உத்தவருக்கு கிருஷ்ணனின் மீது தீராத கோபம் இருந்திருக்கக் கூடும். ஆனாலும் பேசாமல் இருந்தார். சந்தர்ப்பம் கிடைத்தது. கேட்க விடுவாரா? முதல் கேள்வியே நண்பன் என்பவன் யார் என்று கேட்க அதற்கு கண்ணன் சொன்ன பதிலில் இருந்தே ஆரம்பிக்கிறார்.

நண்பனுக்கு ஏற்படும் துயரத்தைத் தீர்க்க, உடனே அழைப்பு இல்லாமலேயே வந்து உதவி செய்பவனே உற்ற நண்பன் என்றாயே... பின்பு ஏன் பாண்டவர்கள் சூதாட ஆரம்பித்த பொழுதே தடுக்கவோ காக்கவோ இல்லை? நீ மட்டும் மனது வைத்திருந்தால் இவ்வளவு பெரிய கொடூரமான போருக்கே தேவை இருந்திருக்காதே என்று உண்மையான சோகத்துடனும்

அக்கறையுடனும் கூடவே கொஞ்சம் கோபத்துடனும் கேட்டார்... அது மட்டுமா? எதனைக் காத்ததாக நீ பெருமைப்படுகிறாய்? ஆபத்தில் உதவுபவன்தானே ஆபத்பாந்தவன்? இந்த நிலையில் உதவாத நீயா ஆபத்பாந்தவன்? நீ செய்தது தருமமா? என்று சாராமாரியாக யசோதை மைந்தனை கடிந்துக் கொள்கிறான்...

நியாயம்தானே?

உலகின் ஒவ்வொரு அசைவையும் அறிந்த ஹரியே இந்தத் தவறைச் செய்தான் எனில் யாருக்குதான் கோபம் வராது?

தருமன் செல்வத்தை இழந்தான்; நாட்டைஇழந்தான்; தன்னையும் இழந்தான். சூதாடியதற்குத் தண்டனையாக, அதோடு அவனை விட்டிருக்கலாம். தம்பிகளை அவன் பணயம் வைத்த போதாவது, நீ சபைக்குள் நுழைந்து தடுத்திருக்கலாம். அதையும் நீ செய்யவில்லை.

திரௌபதி அதிர்ஷ்டம் மிக்கவள். அவளைப் பணயம் வைத்து ஆடு, இழந்தது அனைத்தையும் திருப்பித் தருகிறேன் என்று சவால்விட்டான் துரியோதனன். அப்போதாவது, உனது தெய்வீக சக்தியால், அந்தப் பொய்யான பகடைக் காய்கள் தருமனுக்குச் சாதகமாக விழும்படி செய்திருக்கலாம். அதையும் செய்யவில்லை.

மாறாக, திரவுபதியின் துகிலை உரித்து, அவளின் மானம் பறிபோகும் நிலை ஏற்பட்ட போதுதான் சென்று, துகில் தந்தேன். திரவுபதி மானம் காத்தேன் என்று மார்தட்டிக்கொண்டாய். மாற்றான் ஒருவன், குலமகள் சிகையைப் பிடித்து இழுத்துவந்து, சூதர் சபையில் பலர் முன்னிலையில், அவள் ஆடையில் கை வைத்த பிறகு, எஞ்சிய மானம் என்ன இருக்கிறது? என்று படபடவென கேள்விகளைத் தொடுக்கிறான்.



வழக்கம் போல அமைதியே உருவான சாந்தமான குரலில் தனது பதிலை எடுத்துரைக்கிறான் யசோதை மைந்தன்.

உத்தவரே... விவேகம் உள்ளவனே ஜெயிக்க வேண்டும் என்பது தர்ம நியதி. துரியோதனனுக்கு இருந்த விவேகம் தருமனுக்கு இல்லை. அதனால்தான் தருமன் தோற்றான் என்றான் கண்ணன்.

கிருஷ்ணனின் பதிலுரை கேட்டு உத்தவர் ஏதும் புரியாது திகைத்து நிற்க, கண்ணன் தொடர்ந்தான்.

முதலிலேயே தர்மம் எது என்பதை சுருக்கமாக சொன்ன கிருஷ்ணன் இப்பொழுது கொஞ்சம் விரிவாக அதை எடுத்துரைக்கிறான். துரியோதனனுக்கு சூதாடத்

தெரியாது. ஆனால், பணயம் வைக்க அவனிடம் பணமும், ஏராளமான ஆஸ்தியும் இருந்தது. பணயம் நான் வைக்கிறேன். என் மாமா சகுனி, பகடையை உருட்டிச் சூதாடுவார் என்றான் துரியோதனன். அது விவேகம்.

தருமனும் அது போலவே விவேகத்துடன் செயல்பட்டு, நானும் பணயம் வைக்கிறேன். ஆனால், என் சார்பாக என் மைத்துனன் ஸ்ரீகிருஷ்ணன் பகடைக்காயை உருட்டுவான் என்று சொல்லியிருக்கலாமே? சகுனியும் நானும் சூதாடியிருந்தால், யார் ஜெயித்திருப்பார்கள்? நான் கேட்கும் எண்ணிக்கைகளைச் சகுனியால் பகடைக்காய்களில் போடத்தான் முடியுமா?

அல்லது, அவன் கேட்கும் எண்ணிக்கைகளை என்னால்தான் போட முடியாதா? போகட்டும். தருமன் என்னை ஆட்டத்தில் சேர்த்துக்கொள்ள மறந்துவிட்டான் என்பதையாவது மன்னித்து விடலாம். ஆனால், அவன் விவேகமில்லாமல் மற்றொரு மாபெரும் தவற்றையும் செய்தான். ஐயோ.... விதிவசத்தால் சூதாட ஒப்புக்கொண்டேனே! ஆனால், இந்த விஷயம் ஸ்ரீகிருஷ்ணனுக்கு மட்டும் தெரியவே கூடாது என்று எண்ணி என்னிடமே அதே கோரிக்கையை வைக்கிறான்.

கடவுளே! அவன் மட்டும் சூதாட்ட மண்டபத்துக்கு வராமல் இருக்க வேண்டும் என்று வேண்டிக் கொண்டான்; என்னை மண்டபத்துக்குள் வரமுடியாதவாறு, அவனே கட்டிப் போட்டு விட்டான். நான் அங்கு வரக்கூடாதென என்னிடமே வேண்டிக்கொண்டான். யாராவது தனது பிரார்த்தனையால் என்னைக் கூப்பிடமாட்டார்களா என்று மண்டபத்துக்கு வெளியில் காத்துக்கொண்டு நின்றேன்.

அண்ணன் ஆணையை நிறைவேற்ற துச்சாதனன் சென்று, திரவுபதியின் சிகையைப் பிடித்தபோது, அவளாவது என்னைக் கூப்பிட்டாளா? இல்லை. அவளும் தனது பலத்தையே நம்பி, சபையில் வந்து, வாதங்கள் செய்துகொண்டிருந்தாளே ஒழிய, என்னைக் கூப்பிடவில்லை!

நல்லவேளை... துச்சாதனன் துகிலுரித்தபோதும் தனது பலத்தால் போராடாமல், ஹரி.... ஹரி... அபயம் கிருஷ்ணா... அபயம் எனக் குரல் கொடுத்தாள் பாஞ்சாலி. அவளுடைய மானத்தைக் காப்பாற்ற அப்போதுதான் எனக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. அழைத்ததும் சென்றேன்.

அவள் மானத்தைக் காக்க வழிசெய்தேன். இந்தச் சம்பவத்தில் என் மீது என்ன தவறு? என்று பதிலளித்தான் கண்ணன்.

அருமையான விளக்கம் கண்ணா! அசந்துவிட்டேன். ஆனால் ஏமாறவில்லை. உன்னை இன்னொரு கேள்வி கேட்கிறேன் என்றார் உத்தவர். கேள் என்றான் கண்ணன்.

அப்படியானால், கூப்பிட்டால்தான் நீ வருவாயா? நீயாக, நீதியை நிலை நாட்ட, ஆபத்துகளில் உன் அடியவர்களுக்கு உதவ வரமாட்டாயா? புன்னகைத்தான் கண்ணன்.

உத்தவா, மனித வாழ்க்கை அவரவர் கர்ம வினைப்படி அமைகிறது. நான் அதை நடத்துவதும் இல்லை. அதில் குறுக்கிடுவதும் இல்லை. நான் வெறும் சாட்சி பூதம்.

நடப்பதையெல்லாம் அருகில் நின்று பார்த்துக்கொண்டு நிற்பவனே! அதுதான் தெய்வ தர்மம் என்றான்.

நன்றாயிருக்கிறது கிருஷ்ணா! அப்படியானால், நீ அருகில் நின்று, நாங்கள் செய்யும் தீமைகளையெல்லாம் பார்த்துக் கொண்டிருப்பாய். நாங்கள் தவறுகளைத் தொடர்ந்து செய்து கொண்டேயிருந்து பாவங்களைக் குவித்து, துன்பங்களை அனுபவித்துக் கொண்டே இருக்க வேண்டும். அப்படித்தானே? என்றார் உத்தவர்.

உத்தவரே! நான் சொன்ன வாசகங்களின் உட்பொருளை நன்றாக உணர்ந்து பாருங்கள். நான் சாட்சி பூதமாக அருகில் நிற்பதை நீங்கள் உணரும் போது, உங்களால் தவறுகளையோ தீவினைகளையோ நிச்சயமாகச் செய்ய முடியாது. அதை நீங்கள் மறந்துவிடும்போதுதான், எனக்குத் தெரியாமல் செயல்களைச் செய்துவிடலாம் என்று எண்ணுகிறீர்கள். பாதிப்புக்கு உள்ளாக்கும் சம்பவங்கள் நிகழ்வதும் அப்போதுதான்.

எனக்குத் தெரியாமல் சூதாடலாம் என்று தருமன் நினைத்தானே, அதுதான் அவனது அஞ்ஞானம். நான் சாட்சி பூதமாக எப்போதும், எல்லோருடனும் இருப்பவன் என்பதை தருமன் உணர்ந்திருந்தால், இந்த சூதாட்ட நிகழ்ச்சி வேறு விதமாக முடிந்திருக்கும் என்றான் ஸ்ரீகிருஷ்ணன்.

---

## கிரிவலம் வரும் பௌர்ணமி நாட்கள் 2020

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| மே | 6 | புதன் | இரவு 7.27 | 7 | வியாழன் | மாலை 5.14 |
| ஜுன் | 4 | வியாழன் | இரவு 2.52 | 5 | வெள்ளி | இரவு 2.42 |
| ஜுலை | 4 | சனி | காலை 10.53 | 5 | ஞாயிறு | காலை 9.55 |

# செய்திகள்

## ஸ்ரீரமணாச்ரம செய்திகள்

கொரோனா வைரஸ் தொற்றுநோய் உலகெங்கிலும் பரவி வரும் இன்றைய இந்த அசாதாரண சூழ்நிலையின் காராணமாக மத்திய அரசும், மாநில அரசும் ஊரடங்கைப் பிறப்பித்துள்ளன. கடுமையான சமூக விலகலையும் வலியுறுத்தி வருகின்றன.

பொது ஊரடங்கு நடைமுறைக்கு வந்தது முதல் ஆச்ரமத்திலும் பக்தர்கள் அனுமதிக்கப் படாத நிலையில், ஆச்ரம கோசாலை பசுக்களை பராமரித்தல், நித்திய பூஜை மற்றும் அடிப்படை உணவு தயாரித்தல் போன்ற அத்தியாவசிய காரியங்கள் மட்டுமே ஒரு சில அன்பர்கள் மற்றும் ஊழியர்களைக் கொண்டு, சமூக இடைவெளியுடன், செய்யப்பட்டு வருகின்றன.

மேலும் ஆச்ரம அலுவலகம், புத்தகாலயம், மருந்தகம் முதலிய அனைத்து செயல்பாடுகளையும் நிறுத்தி ஆச்ரம பிரதான வாயிற்கதவும் தாளிடப் பட்டுள்ளது.

ஆச்ரம தினசரி நாராயண சேவையானது, உள்ளூர் அதிகாரிகளின் அனுமதியுடன், அரசு பரிந்துரைக்கும் சுகாதார நடவடிக்கை மற்றும் சமூக இடைவெளி கடுமையாகக் கடைப்பிடிக்கப்பட்டு, சுமார் 400 சாதுக்களுக்கு உணவு அளிக்கப்படுகின்றது. மேலும் உள்ளூர் நகராட்சியினர் வேண்டுகோளுக்கிணங்க, ஆச்ரமம் சுமார் 200 நபர்களுக்கு உணவு தயாரித்து அனுப்பி வருகின்றது. இவ்வுணவினை ஆதரவற்ற ஏழைகளுக்கு அம்மா உணவகத்தின் மூலம் நகராட்சியினர் வழங்கி வருகின்றனர்.



ஆச்ரமத்தில் சமூக விலகலுடன் 'நாராயண சேவை' காட்சிகள்





*ஸ்ரீராம நவமி (2-4-2020) மற்றும்*
*மஹாநிர்வாண தினம் (ஏப்ரல் 14)*



## ஸ்ரீவித்யா ஹோமம்

*தற்போது நிலவி வரும் இந்த அசாதாரணமான சூழலின் காரணமாக மார்ச் 19-ஆம் தேதி நடைபெறவிருந்த ஆச்ரம வருடாந்திர நிகழ்வான ஸ்ரீ வித்யா ஹோமம் ஒத்தி வைக்கப்பட்டது.*

## பகவான் ரமண மகரிஷிகளின் 70-ஆவது ஆராதனை விழா

*மேலும் 20/4/2020 அன்று நடைபெறவுள்ள பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளின் 70-ஆவது ஆராதனை விழாவும் பொதுமக்கள் அன்னதானம், இசை நிகழ்ச்சிகள் முதலிய யாவும் ரத்து செய்யப்பட்டு, கட்டுப்பாட்டுடன் கூடிய பூஜைகளுடன் மிக எளிமையான முறையில் நடைபெற உள்ளது.*

*திருச்சுழி ஸ்ரீ சுந்தர மந்திரம் மற்றும் மதுரை ஸ்ரீ ரமண மந்திரத்திலும் நித்திய பூஜைகள் மட்டும் எளிமையாக நடைபெற்று வருகின்றன. அன்பர்கள் அனுமதி இல்லை.*

# ரமண கேந்திர செய்திகள்

## குரோம்பேட்டை, ரமணாலயம்

*ஸ்ரீ ரமணாச்ரமத்திற்கு பாத்தியப்பட்ட குரோம் பேட்டை ரமணாலயத்திலும் ஊரடங்கின் காரணமாக, அன்பர்கள் தரிசனத்திற்கு அனுமதிக்கப் படவில்லை. தினசரி நாராயண சேவையும் தாற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது. நித்திய நிகழ்ச்சிகளான பூஜை, பாராயணம் முதலியன தவறாமல் எளிய முறையில், சமூக இடைவெளியுடன் நடைபெற்று வருகின்றன.*

## ஸ்ரீமுருகனார் மந்திரம், இராமநாதபுரம்

*ஊரடங்கின் காரணமாக ஸ்ரீ முருகனார் மந்திரத்திலும் அன்பர்கள் தரிசனத்திற்கு அனுமதி இல்லை. நாராயண*

சேவை மட்டும் கட்டுப்பாடுகளுடன் அளிக்கப்பட்டு வருகின்றது.

## கோட்டூர் மலையாண்டிபட்டினம், பொள்ளாச்சி

பகவான் ஸ்ரீ ரமண மகரிஷிகளின் 70 ஆவது ஆராதனை தினத்தையொட்டி திட்டமிடப்பட்டிருந்த திருவாசக முற்றோதல் நிகழ்ச்சி ரத்து செய்யப்பட்டு, தற்போதைய சூழலை அனுசரித்து, திருவாசகத்தில் குறிப்பிட்ட சில பதிகங்களை குடும்ப அளவில் பாராயணம் செய்து ஆராதனையை எளிமையாக நடத்த திட்டமிடப்பட்டுள்ளது.

ஸ்ரீ ரமணாஸ்ரமம் மற்றும் ஆஸ்ரமத்திற்கு பாத்தியப்பட்ட மதுரை, திருச்சுழி, இராமநாதபுரம் மற்றும் குரோம்பேட்டை ஆகிய மையங்களில் அரசாங்க அறிவுறுத்தல்களை அனுசரித்தும் மற்றும் எல்லோரின் நலன் கருதியும் இந்த நடைமுறைகள் அனுசரிக்கப்பட்டு வருகின்றன.

உலகெங்கிலும் நிலவி வரும் இந்த அசாதாரண சூழல் விரைவில் சரியாகவும் சகஜ நிலை திரும்பி பொதுமக்கள் இயல்பு வாழ்க்கை மேற்கொள்ளவும் உண்ணாமுலை உடனாகிய அண்ணாமலையார் மற்றும் பகவான் ரமண மகரிஷிகள் பேரருள் புரிவார்களாக!

---

## ரமணோதயம்
## Voluntary Services

| | |
|---|---|
| K. சுரேஷ் ஜானகிராமன் | 9444127770 |
| ராஜேஷ் M.S. | 9840075778 |

---

## பகவான் ரமணரின் சேவை மையங்கள்

| | | |
|---|---|---|
| ***மைலாப்பூர்*** திரு R. வேங்கடகிருஷ்ணன், ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் | ......... | 24611397 |
| ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் மேலாளர் கண்ணன் | ......... | 9940418375 |
| ***குரோம்பேட்டை, ரமணாலயம்*** | ........ | 9444261296 |
| ***கிழக்கு தாம்பரம்*** திரு M.A. ராமசாமி | ........ | 9790873138 |
| ***நங்கநல்லூர்*** திரு S. இராமமூர்த்தி | ........ | 22244667 |
| ***மாம்பலம்*** திரு M.K. வைத்தியநாதன் | ........ | 23716495 |
| ***விருகம்பாக்கம்*** திருமதி கௌசல்யா | ........ | 24790635 |
| ***கொளத்தூர்*** கே.ஆர். கோபாலகிருஷ்ணன் | ........ | 9884355454 |
| ***சூளைமேடு*** திரு V. ரமணன் | ........ | 9444172623 |
| ***புதுச்சேரி*** ***ரமண கேந்திரம்*** | ........ | 0413-2272141 |
| ***மதுரை*** சோமசுந்தரம் | ...... | 04522348157/2346102 |
| ***இராமநாதபுரம்*** சிரஞ்சீவி | ........ | 9360047936 |
| ***திருச்சுழி*** ஹாலாஸ்ய பட்டர் | ........ | 9442004615 |
| ***மலையாண்டிபட்டினம்*** பாலசுப்பிரமணியம் | ........ | 9965622878 |
| ***பொள்ளாச்சி*** ரமண குமார் | ........... | 9487016880 |
| ***ஒட்டன்சத்திரம்*** வடமலைக்கண்ணன் | ........ | 9842912474 |
| ***பழனி*** என். சோமசுந்தரம் | ........ | 9942327770 |
| ***சேலம்*** குப்புசாமி | ........ | 0427-2295460 |
| ***வந்தவாசி*** டாக்டர் ரவி | ....... | 9787180757 |
| ***மடம்*** சுந்தரமூர்த்தி | ........ | 9942264556 |
| ***திண்டுக்கல்*** பழ. முத்தையா | ......... | 9443070924 |
| ***பூண்டி*** மாரியப்பன் | ......... | 9486576687 |


---

Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

Printed and Published by: A. Kumar Raja, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.




ஆச்ரம காட்சிகள்

Registered with the Registrar of Newspaper for India RNI No.:TNTAM/2001/5542

